410

பொன்னி

PONNI 25-1-52



எல்லார்க்கும்
எல்லாம்
இருப்பதான
இடம்
நோக்கி..........



வேலை
யில்லாட்டியும்
வெட்டியாய்க்
கிடக்கோம் !

உயர இருக்கும்
அய்யாவே
முகத்தைக்
காட்டேன்
மெய்யாவே !

புகைப்பட்ம் : எஸ். எம். எஸ்.

பொன்னி

பொருளடக்கம்

மலர் 5 | ஜனவரி 25, 1952 | இதழ் 21

திருவள்ளுவர் ஆண்டு 1983 தைத்திங்கள் 12-ம் நாள்

18 FEB 1952
MADRAS

கூட்டுமந்திரி சபை	... தென்னேட்டி விசுவநாதன்	1
கண்ணீர் வெள்ளத்தில் மந்திரிகள்	... கார்ட்டூன்	2
மக்கள் தீர்ப்பு	... தலையங்கம்	3
வாழ்க இளம்பரிதி	... வாணிதாசன்	6
குற்றச்சாட்டு	... புதுமைச்சித்தன்	10
ஐந்தாண்டுத் திட்டம்	... அ. வெ. தியாகராஜா	17
ஓடாத கடிகாரம்	... நாஞ	20
புதுவகைப் பொம்மலாட்டம்	... நா. கி. நாகராசன்	25
விடுதலை	... டி. ஜே. இன்பராஜ்	30
பிளாபர்ட்	... மு. அண்ணாமலை	34
அடிமை ஆனேன்	... நா. சீ. வரதராசன்	37
பவுன் மோதிரம்	... வீர. பழனியப்பன்	39
தமிழ் விருந்து	... தமிழ்த்தும்பி	58
வளரும் இலக்கியம்	... பூவை	63

கூட்டுமந்திரி சபை

நாங்கள் காங்கிரஸ் அபேட்சகர்களை எதிர்த்துப் போட்டியிட்டு அவர்களை முறியடித்திருக்கிறோம். இந்த நிலைமையில் நாங்கள் காங்கிரஸில் சேருவோமா? நானும் மீண்டும் காங்கிரஸில் சேரப்போவதில்லை. காங்கிரஸைத் தோற்கடிப்பதில் இவ்வளவு தூரம் சிரமப்பட்ட யாருமே திரும்ப மாட்டார்கள். காங்கிரஸ் செத்துப்போய்விட்டது என்றே சொல்லலாம். அதுவும் ஆந்திராவைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் செத்தொழிந்துவிட்டது. காங்கிரஸைத் தோற்கடித்த பல்வேறு கட்சியினரும் ஒன்றுபட்டுக் கூட்டுமந்திரி சபை அமைப்பார்கள் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன். பொதுவான திட்டம் ஒன்றை வகுத்து, அந்த அடிப்படையில் கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து ஒத்துழைப்பது மிக்க அவசியமாகும். இப்படிச் செய்வதால் கம்யூனிஸ்டு கட்சியுடன் இணைந்துகொண்டதாக அர்த்தமாகாது.

[பிரஜா கட்சித் தலைவர்களில் முக்கியமானவரான தென்னேட்டி விசுவநாதன் இவ்வாறு ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.]

மக்கள் கண்ணீர் வெள்ளத்தில் மந்திரிகள்!

முதலமைச்சர் கனம் குமாரசாமிராஜா உட்படச் சென்னை அமைச்சர்கள் அறுவர் பொதுத்தேர்தலில் தோல்வியடைந்திருக்கிருர்கள்.

மக்கள் தீர்ப்பு

பொதுத் தேர்தல் ஏறக்குறைய முடியும் கட்டத்திலிருக்கிறது. தேர்தல் முடிவுகள் மூன்றில இரண்டு பங்கு ஸ்தானங்களுக்கு அறிவிக்கப்பட்டுவிட்டன. இம்முடிவுகளைக் கூர்ந்து கவனித்தால் மக்கள் இத் தேர்தலில் வழங்கியிருக்கும் தீர்ப்பென்ன என்பது நமக்குப் புலனாகும்.

தேர்தல், காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருக்கும் போது நிகழ்வதால், இயற்கையாகக் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவான சூழ்நிலை இருக்கத்தான் செய்யும். மேலும் காங்கிரஸ்கட்சி அளவு மக்களிடையே விளம்பரம் பெற்றுள்ள கட்சி வேறு எதுவும் இல்லை. தேர்தலில் நிற்பதும் வெல்வதும் காங்கிரஸ்காரர்கட்குப் பழக்கமாகிவிட்ட செயல்கள், மற்ற கட்சிகளுக்கும் சுயேச்சையாளர்களுக்கும் 'புது அனுபவம்' இந்தத் தேர்தல். மேலும் காங்கிரஸ்கட்சிக்குள்ள வாய்ப்பும் வசதியும் மற்றெந்தக் கட்சிக்கும் கால்பங்கு, அரைக்கால் பங்கு அளவு கூட இல்லை. இந்தியாமுற்றும் காங்கிரஸைத் தவிர 4000 ஸ்தானங்களுக்கும் ஆள் நிறுத்தியகட்சி வேறு இல்லை. சோஷலிஸ்டுகள் கூட 2000 ஸ்தானங்களுக்குத்தான் நிறுத்தியிருக்கின்றனர். கம்யூனிஸ்டு கட்சி மொத்தம 700 ஸ்தானங்களுக்குத்தான் போட்டியிடுகிறது. மற்ற சிறு கட்சிகளைப் பற்றிக் கூறவேண்டியதில்லை. அவை ஆங்காங்கு சில இடங்களில் மட்டுமே போட்டியிடுகின்றன.

மற்றும் பெரிய வசதி காங்கிரஸுக்குக் கிடைத்திருக்கிறது. பத்திரிகைகளின் ஒத்துழைப்பு காங்கிரஸ் கட்சிக்கு வாய்த்த மாதிரி மற்ற கட்சிகளுக்கு வாய்க்கவில்லை. காங்கிரஸின் தேர்தல் சின்னம் மக்கள் மன்றத்தில் பதிந்த அளவு, மற்ற கட்சிகளின் சின்னங்களோ, உதிரிகளின் சின்னங்களோ, விளம்பரம் பெற முடியவில்லை, வசதியுமில்லை. இத்தனைக்கும் காரணம் காங்கிரஸ் பெரிய ஸ்தாபனம், நேரு போன்ற தலைவர்களைக் கொண்ட ஸ்தாபனம், தேர்தலில் போட்டியிடும் பல கட்சிகள் தோன்று முன்னர்த் தோன்றிய ஸ்தாபனம், அவை தோன்றக் காரணமாய் இருந்த ஸ்தாபனம் என்பது தான்!

எனவே இந்தத் தேர்தல் வாலிபமுறுக்கேறிய இளைஞனுக்கும், நேற்றுப்பிறந்த குழந்தைக்குமாக நடக்கும் போட்டா போட்டியே என்று கூறினல் மிகையாகாது. இந்தப் போட்டா போட்டியில் காங்கிரஸ் வெல்லும் என்பதும், மற்ற கட்சிகள் பெயருக்கு ஒன்றிரண்டு இடங்களில் வெல்வதைத்தவிர மற்ற இடங்களில் தோற்கும் என்பதும் யாரும் எதிர்பார்த்தவையே. எதிர்பார்த்தபடி பம்பாய், மத்தியப் பிரதேசம், இமாசலப் பிரதேசம் முதலிய ராஜ்யங்களில் காங்கிரஸ் வெற்றிக்கொடி நாட்டி வருகிறது! ஆனல் திருவாங்கூர்—கொச்சி

யில் மைனரிட்டிக் கட்சியாகி விட்டது. ஹைதராபாத்திலும், சென்னையிலும் மைனரிட்டிக்கட்சி ஆகிவிடுமோ என்று அஞ்ச வேண்டிய நிலைக்கு வந்திருக்கிறது. மற்ற ராஜ்யங்களின் நிலைமை இனிமேல்தான் தெரிய வேண்டும்.

சென்னையை மட்டும் எடுத்துக் கொள்வோம். 24-1-52 முடியக் கிடைத்த செய்திகளின்படி, முடிவு அறிவிக்கப்பட்ட 283 ஸ்தானங்களுக்கு காங்கிரஸுக்குக் கிடைத்திருப்பது 116 ஸ்தானங்களே! பாக்கியுள்ள 92 ஸ்தானங்களின் முடிவு இந்த விகிதாசாரப்படியே இருக்குமானால் காங்கிரஸ் தனியாக மந்திரிசபை அமைக்கக்கூடிய கட்சியாக வெற்றிபெறமுடியாது. சென்னை ராஜ்யத்தில் காங்கிரஸுக்கு ஏன் இந்தப் படுவீழ்ச்சி ஏற்பட வேண்டும்? எதிர்க்கட்சியினர் கூட இதனை எதிர்பார்க்கவில்லையே!

சென்னை ராஜ்ய அமைச்சர்கள் ஆறு பேர் தேர்தலில் தோல்வியடைந்திருக்கிறார்கள். முதலமைச்சர் குமாரசாமி ராஜா, ராஜாபாளையம் தொகுதியில் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்! கனம் பக்தவத்சலம் பொன்னேரியில், ஆயிரக்கணக்கான வாக்கு வித்தியாசத்தில் தோற்றிருக்கிறார். ஆந்திர மந்திரிகள் காளா வெங்கட்டராவ், கோபால் ரெட்டி, சந்திரமவுலி முதலியோர் தங்கள் தங்கள் தொகுதிகளில் பெரும் எண்ணிக்கை வித்தியாசத்தில் தோல்வியைப் பெற்றிருக்கிறார்கள். ஆந்திரா காங்கிரஸ் தலைவர் சஞ்சீவி ரெட்டி—முன்பு அமைச்சர்—வெட்கப்படும் வகையில் படுதோல்வி அடைந்திருக்கிறார். மேலும் திண்டிவனம் பார்லிமெண்ட் தொகுதியில் தோழர்கள் ராம்நாத் கோயங்கா, வி. ஐ. முனிசாமிப்பிள்ளை போன்ற 'பெரிய பெரிய' ஆசாமிகளெல்லாம் லட்சக் கணக்கில் ஓட்டு வித்தியாசம் காட்டி வெல்லப்பட்டிருக்கிறார்கள். ஆந்திராவிலும் மலபாரிலும் கம்யூனிஸ்டு நண்பர்களும், பிரஜாகட்சி, ரங்கா கட்சி நண்பர்களும் பெருவாரியாக வெற்றியடைந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் உழைப்பாளர் கட்சி, காமன்வீல் கட்சி, கம்யூனிஸ்டு கட்சி முதலியவை குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றிருக்கின்றன. தி. மு. க. ஆதரவுபெற்ற சுயேச்சையாளர்களும் மற்றவர்களும் காங்கிரஸுக்கு அடுத்தபடியாக வெற்றிபெற்ற ஸ்தானங்களை நிரப்பிவருகிறார்கள். ஏன் இந்த அவல நிலை காங்கிரஸுக்கு ஏற்படவேண்டும்?

மக்கள் காங்கிரஸ் ஆட்சியிடம் தங்களுக்கு நம்பிக்கையில்லை என்பதை இந்தத் தேர்தல் மூலம் அறிவித்துவிட்டார்கள். கனம் குமாரசாமி ராஜா கூறியது போல, காங்கிரஸைத் தூய்மைப் படுத்தியிருக்கிறார்கள்; அமைச்சர்களைப் புது மனிதர்களாக்கியிருக்கிறார்கள்.

சென்னை ராஜ்யத்தில் எதிர்க்கட்சிகள் வலுப்பெறவில்லை. ஒன்றிரண்டு செல்வாக்குள்ள கட்சிகளும் தேர்தலில் 'ஏனோதானோ' வென்று நடந்து கொண்டன. மேலும் எதிர்க்கட்சிகள் தங்களுக்குள் பகைமை வளர்க்க முனைந்தனவே தவிர, இணைப்பான எதிர்ப்பை

உருவாக்க முனையவில்லை. இந்நிலையில் காங்கிரஸை எதிர்க்கும் சக்திகள் சிதறுண்டு நின்றன. இவ்வாறு சிதறி நின்றதால் ஏற்பட்ட பலனைக் கட்சித்தலைவர்கள் நன்கு புரிந்து கொண்டிருக்கலாம். ஒன்றுக்கு மேல் பலர் போட்டியிட்டதாலேயே பல இடங்களில் காங்கிரஸ் வர முடிந்திருக்கிறது என்ற உண்மையையும் தேர்தல் முடிவுகள் நன்கு காட்டுகின்றன. இத்தனை இடையூறுகள் காங்கிரஸை எதிர்ப்பவர்கட்கு இருந்தும், அவர்கள் பெருவாரியாக வெற்றிபெறவும், காங்கிரஸ் சிறுபான்மையாகவும் காரணமென்ன?

முக்கிய காரணம் காங்கிரஸ் மீது மக்களுக்கு வளர்ந்துவிட்ட கசப்புத்தான்! காங்கிரஸ் ஆட்சியிடத்து மக்கள் எல்லையில்லா வெறுப்புக் கொண்டுவிட்டனர் என்பதையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. இந்தக் கசப்பு நிலையைச் சரிவர எதிர்க்கட்சிகள் பயன்படுத்திக் கொள்ளவில்லை. ஒரு கட்சியும் அரசாங்கம் அமைக்கும் அளவுக்கு ஸ்தானங்கள் பெறும் நோக்கத்தில், அபேட்சகர்களைப் போதுமான அளவில் நிறுத்தவில்லை. என்றாலும் மக்கள் காங்கிரஸ் வெறுப்புணர்ச்சியைப் பூரணமாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள்; காங்கிரஸை எதிர்த்து நின்றவர் எவரானாலும்—அவர் யாரென்றுகூடக் கவனியாமல்—தங்கள் வாக்குகளை வழங்கியிருக்கிறார்கள். மக்கள் தந்துள்ள இத் தீர்ப்பு ஆட்சிபீடம் ஏறப்போகும் புது முகங்களுக்குத் தக்க எச்சரிக்கையாகும்.



தோழர். டி. கே. சீனிவாசன் தங்கை தோழியர் இராஜராஜேஸ்வரிக்கும் மன்னார்குடி தோழர் சுந்தரமூர்த்தி அவர்கட்கும் 5–12–51 அன்று தஞ்சையில் திரு. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் வாழ்க்கைஒப்பந்தம் நடந்தது. தோழர்கள் ஏ. கே. வேலன், எஸ். எஸ். மணி, ப. நாராயணசாமி, என். எஸ். ஷண்முக வடிவேலு, நா. பாண்டுரங்கன் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர்.

வாழ்க இளம் பரிதி!

வாணிதாசன்

திருச்சி வானொலியில் பொங்கல் நாள் கவியரங்கில் நிகழ்த்தப் பெற்றது.

கடற்பரப்பில் உப்பங் கழிப்பரப்பில் தாழை
மடற்பரப்பில் நெய்தல் மணற்பரப்பில் சாய்ந்த
முடப்புன்னை பைங்கிளையில் முண்டகப்பூங் காட்டில்
அடங்கி இருந்தஇருள் அற்றொழியக் கீழ்க்கடல்மேல்
தங்கப் பரிதி தலைநிமிர்ந்தான்! வாழியவே!
எங்குமே இன்பம்! இளம்பரிதி வாழியவே!
வானில் மலையில் மரக்காவில் பூம்புதரில்
போன ஒளிஅடடா! பொன்வெள்ளம்! பொன்வெள்ளம்!

ஆசை மனையாட்டி! அன்பே இதைக்கேள்நீ!
மூசையிலே வைத்தெடுத்த பொன்னே முளைத்தகதிர்
நீர்நிலம்கால் விண்ணை நிலைத்த பொருளையெலாம்
ஆட்டிப் படைப்பதுவும் ஆக்கம் விளைப்பதுவும்
வானம் முளைத்து வரும்பரிதி செய்கையடி!
நானிலத்தில் பொய்கை நறும்பூவில் வான்முகட்டில்
ஊனில் உடலில் உயிர்ப்பில் ஒளிவீசி
வானும் எழுச்சியினைச் செய்ததடி! வாழ்க கதிர்!

இன்னும்கேள் பெண்ணரசே! ஏரிக் குளம்குட்டை
வற்றி வெடித்து மரக்கிளைகள் பட்டுலரச்
சுற்றிப் படர்ந்தகொடி தோப்பும் கலகலக்க
நன்செய் பொலிவிழக்க நல்லாறு நீர்வற்றப்
புன்செய் இறைத்துழவன் நாளெல்லாம் போராட
வானம் அனல் சொரியும்! மண்ணும் கனல் எழுப்பும்!
இட்ட அடிவேகும்! ஒட்டும் பொடிகாலில்!

பட்ட செடிகொடிகள் மொட்டை மரங்களெலாம்
வேகாது வெந்து வெறிச்சென் றிருந்திடுமே!
மண்ணெழுப்பும் கானல்! வருங்காற்றுத் தீச்சொரியும்!
கண்ணுக்குத் தோன்ருத புண்ணய் உடல்கொதிக்கும்!
சிற்றூரும் பேரூரும் தீய்த்த முதுவேனில்
அற்றெழிந்தும் மக்கள் துயரற் றெழியவில்லை!

வானம் குமுறும்; வளர்ந்தமலைக் கூட்டம்போல்
ஏனம் வெறிகொண் டெழுதல்போல் யானை
தலைதெறிக்க ஓடும் தகைமைபோல் கார்வானில்
அங்குமிங்கும் ஓடும்! அதிரும்! முழவார்க்கும்!
சிங்கத் தமிழர் செறுகளத் தோசையென
வானம் இடிக்கும்! மழைபொழியும்! நீள்மூசைத்
தங்க உருக்குபாய் தாரைகளைப் போல்மின்னல்
கண்ணைப் பறிக்கும்! கருத்தழிக்கும் காற்றிரைச்சல்!
நீண்டபனை தென்னை நிலைகால் தெரியாமல்
மூண்டெழுந்த காற்றுடனே ஆடும்! முறிந்தொடியும்!
கொட்டகையில் மாடுகன்று கூண்டில் பறவைஇனம்
கட்டுண்டு மங்கிக் கலங்கும் பசியாலே!
வெளிசெல்ல வொண்ணு! வினைசெய்ய வொண்ணு!
ஒளியற்று மக்கள் ஒடுங்கிக் கிடந்திடுவர்.
தீமை விளைத்தகார் சென்றதுவாம் ஆனலும்

வெள்ளக் கொடுமை வெளிசொல்லக் கூடுவதோ?
பள்ள வயல்நினைவால் பாழை மறந்தோமே!
ஏர் ஓசை கேட்டுமனத் தின்பம் பிறந்ததடி!
நீர்வயலில் பாய்ந்தோட நெஞ்சம் குளிர்ந்ததடி!
பச்சைக் கடல்போல் பரந்த வயல்வெளியில்
நச்சுப்புல் நீக்கி நலஞ்சேர் உரமிட்டு
வளர்த்தோம்! மகிழ்ந்தோம்! வயலில் பசுநெல்
இளைப்பசும் பாம்பாய்க்கிளைத்து வளர்ந்தது!
கூதிர் அகலச் சிறுகுறை தோன்றியதே

தோப்பும் தூரவும் விழிப்புலனுக் கெட்டாது
காப்புத் திரையிட்டு வைத்ததுபோல் மூடுபனி!
மண்ணுக் கடியில் வண்தீ இருப்பதைப் போல்
கண்ணுக்கு நீண்டமட்டும் காணும் பனிப்புகையே

ஊதை உடல்நடுக்கும்! ஊரெல்லாம் தீக்காயும்!
கொம்புத் துளிர்கருகும்! கொத்தெல்லாம் சீர்அரும்பும்!
செம்பொன் சிறுகிண்ணம் போல்பூக்கும் பூசணிப்பூ!
ஆமை தலைபோல் அழகு சிறுகாயை
நாமடைய விட்டுவைக்கும் நற்பறங்கி, வீட்டோரத்
தோட்டத்து வேலியிலே தொங்கும் சுரைக்காய்கள்
மீட்டாது மாட்டிவைத்த மெல்யாழாம்! தென்னைமரக்
குட்டை நிறைந்த குளிர்அல்லித் தாமரைநீர்
மட்டத்தில் வந்து மலர்பூக்க எத்தனிக்கும்!
செந்நெல் பழுத்ததுவே தீம்பலா முற்றியது
கன்னலோ நாணற் கடல்போலப் பூத்ததுவாம்
காட்டுப்பூ வெல்லாம் கார்முல்லை நீளரும்பு
வீட்டுக் கருகிருந்து மெல்லச் சிரித்தழைக்கும்!
யாழ்மீட்டும் தேன்வண்டு! யார்அதைப்போல் பாடவல்லார்?
வாட்டும் குளிர்காற்று வாய்க்கடையில் புண்செய்து
காட்டும் பனிநாள் கடந்துவந்த தைக்கண்டோம்!

தைகண்டோம் அன்பே! தமிழ்கண்டோம் இந்நாள்நாம்!
வையத்துப் புத்தாண்டின் முன்னாள் வரக்கண்டோம்!
பொன்னொளியை வான்கடல்மேல் பூசிச் சிரித்த கதிர்
இன்னே வரக்கண்டோம்! இன்பம் வரக்கண்டோம்!
வாழ்க இளம்பரிதி! புத்தாண்டு வாழியவே!

இல்லம் புதுக்கி எழில்புதுக்கி நீராடி
அல்லொத்த கூந்தல் அழகைப் பெருக்க
நறுநெய் தடவுக! நன்றாக வாரிமுடி!
புத்தாடை பூண் நீ! மலர் சூடு! நம் வீட்டுச்
சொத்தாம் குழந்தைகளைத் தூய்மைப் படுத்துகவே!
நேற்றறுத்த நெல்லரிசி நீள்தாழை முள்ளாம்
திருத்திக் களைந்து செழுங்கரும்பின் கட்டியிட்டுப்
பானை உலையேற்றிப் பால்சொரிந்து தீக்கொளுத்த
பொங்கலோ! பொங்கல்! பெரும்பொங்கல் வாழியவே!
சிங்கத் தமிழர் திருநாளும் வாழியவே!

“இங்குள்ளோர்க் கொன்றுமினி இல்லை எனும்தீஞ்சொல்
தங்கா தொழிக! தமிழ் வாழ்க! வாழ்க!” எனச்
சூழ்ந்து குரலெழுப்பச் சோறு சமைந்துவரத்
தேனை நறுநெய்யை ஏலச் சிறுபொடியை
ஆனமட்டும் தூவிநீ ஆக்கிப் படைத்திடுவாய்!
கூப்பிடு! வாழ்வோர் அனைவரையும் கூப்பிடடி!
காப்பெதற்கு? கார்தந்த செல்வம் விளைபொருள்கள்!
சாப்பாட்டைத் தேக்காதே! சண்டை அதன் விளைவாம்!
பங்காக்கி உண்போம்! பசியேது பின்நாட்டில்!

கொண்டுவா யாழை! குழந்தைகளைப் பாடவிடு!
பண்டைத் தமிழ்வீரம் பாடட்டும் கேட்போம்!
அரசர் மடிமேல் அரும்புலவர் செந்நாவில்
ஓங்கி வளர்ந்த உயர்தமிழைப் பாடட்டும்!
திங்கள் இனிமை மணமென்று செப்புகின்ற
மங்காத் தமிழ்இனிமை வாயாரப் பாடட்டும்!
ஊனுயிரை மக்கள் உணர்வை வளர்த்துவரும்
தேனும் செழுந்தமிழைப் பாடட்டும் கேட்போம்!
உனது குரலினிமை உன்மக்கள் சொல்லில்
கனிந்துளது; ஆதலினால் கண்மணிகள் பாடட்டும்!
வாழ்க இளம்பரிதி! வாழ்கவே தைப்பொங்கல்!
பொங்கலோ! பொங்கல்! உளம் பொங்கும் இந்நாள்போல்
எங்கும் தமிழ்மக்கள் எந்நாளும் வாழ்க!
உயர்க பலதுறையில்! இன்பம் உயர்க!
அயர்விலும் நாட்டின் உயர்வே நினைக!
அறமும் திருவும் அறிவும் நிறைந்திடுக!
சீர்பெற்றுக் கன்னித் தமிழ்வாழ்க! என்றும்
திருநாடு வாழ்க சிறந்து!

குற்றச்சாட்டு

புதுமைப்பித்தன்

விடிந்தால் பதினெட்டாம் பெருக்கு. அதற்கு வேண்டிய சாமான்களை என் மனைவி சித்தப் படுத்திக் கொண்டு இருந்தாள். கொய்யாப்பழம், வாழைப்பழம், விளாம்பழம், வெற்றிலைப்பாக்கு, வெல்லம் கலந்த அரிசி, மல்லிகைப்பூ, மஞ்சள் தடவிய நூல் இன்னும் என்னவெல்லாமோ அந்தத் தட்டை அலங்கரித்துக் கொண்டிருந்தன.

இருக்கவேண்டிய சாமான்களெல்லாம் சரியாக இருக்கிறதாவென்று வீடுகட்டும் கொத்தன்களை மேற்பார்வை பார்க்கும் ஒரு மேஸ்திரியைப் போலப் பார்த்துவிட்டு என்னிடம் வந்தாள்.

"இந்தாங்கோ..."

நான் என்னவென்று கேட்டேன்.

"விடியக்காத்தாலே சூரிய உதயத்துக்கு முந்தி ஆற்றிலே போய் முழுகினுத்தான் ரொம்பப் புண்ணியமாம்."

"ஒரு வீசை கிடைக்குமா? ரெண்டு வீசை கிடைக்குமா?"

"என்ன அது?"

"நீ சொன்னியே புண்ணியம்னு அது."

"உங்களுக்கு எப்பவும் இந்தக் குதர்க்கப் பேச்சும் கோணல் புத்தியும்தான்."

"இல்லே, இல்லே! நீ விஷயத்தெ சொல்லு...ம்...ரொம்பப் புண்ணியமாம். அதுக்கு...?"

"தலைக்கோழி கூவுறச்சேயே நான் எதிர்த்த வீட்டு மாமியோடே காவிரிக்குப் போறேன்"

"விடியற்காலை நோத்துலே கெடைக்குமே, அந்தச் சுகமான தூக்கத்தெ உதறித் தள்ளிட்டா?"

"பால்காரன் வந்து கூவுவான். மறந்துடாமே பாலை வாங்கி வையுங்கோ."

"பாலை வாங்கிவைக்கிறதென்ன? காப்பியே போட்டுடறேன்."

"ஆமா, நீங்க காப்பி போட்டு வாழ்ந்திங்க!"

"ஏன்? நான் காப்பி போட மாட்டேனா? சமையல்லே, ஐயா எக்ஸ்பர்ட்டாக்கும்!"

"ஏன் வாய்ப்பந்தல் போடுறீங்க? வாசலுக்குச் சாணந் தெளிக்க வேலைக்காரி வருவா, அவ சாணந் தெளிச்சுட்டுப் போகும்போது கொஞ்சம் ஜாக்கிரதையாப் பார்த்துக்குங்கோ!"

"ஏன்?"

"அவ கை கொஞ்சம் நீளம்!"

"அது உனக்கெப்படித் தெரியும்?"

"கோடிவீட்டுக் குஞ்சிதம் சொன்னா!"

"அவ கோள் சொல்றதுலே நிபுணியாச்சே. அவ பேச்சையா நம்புறே?"

"போனுப் போவுது! என்னு? நான் சொன்னதெல்லாம் ஞாப கம் இருக்குதுங்களா?"

"பேஷா!"

*　　*　　*

மாலாவிற்கு இந்தப் பைத் தியம் பிடித்துச் சிறிது கால மாகிறது. கண்ட கண்ட ஆற் றிலே, குளத்திலே முழுகிப் 'புண் ணியம்' சம்பாதிக்கும் பைத் தியம். இதற்கெல்லாம் காரணம் எதிர்த்த வீட்டு மாமிதான்!

விடியற்காலையில் விறைக்க வைக்கும் குளிரில் ஆற்றில் போய் முழுகாவிட்டால் என்ன கெட்டுப் போகிறது? வெட வெடவென்று நடுங்கும் குளிரில் குளிப்பதால் கிடைக்கும் புண் ணியத்தை விட, விடியற்காலை யில் இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்கும் தூக்கத்தின் சுகம் தானே மேலானது? அது அவளுக்கென்ன தெரியும்?

எனக்கும் திருநிறைச் செல்வி மாலாவிற்கும் — திருநிறை செல்வி என்றுதான் விவாக சுப முகூர்த்தப் பத்திரிகையில் அவள் பெயருக்கு அடைமொழி போட்டிருந்தார்கள் — கல்யாண மாகிச் சரியாக ஒரு வருடம் ஆக வில்லை. அதற்குள் தனிக்குடித் தனம்! என்ன செய்வது? வயிற்றுப் பிழைப்பு இருக் கிறதே! மாமியார், நாத்தனர், 'லூட்டி' யெல்லாம் ஒன்றுங் கிடையாது. சுகமோ துக்கமோ எதுவாயிருந்தாலும் எங்கள் இரண்டு கட்டைகளுடன் சரி!

விடியப்போகிறது என்பதற்கு அடையாளமாக உயிர்க் கடிகார மான தலைக்கோழி கூவிற்று! மாலா படுக்கையிலிருந்து எழுந் தாள்!

வாசல் கதவைத் திறக்கும் சப்தம். மீண்டும் இழுத்து மூடும் சப்தம்! அவள் ஆற்றிற்குப் போய்விட்டாள். என் நிலை அமைதியாக இருந்த நீர்ப்பரப் பில் கல்லை விட்டெறிந்து அலை களை எழுப்பியது போலாகிவிட் டது. சுகமாகத் தூக்கம் வந்த சமயம்; அதை, இதைப் பேசிக் கெடுத்துவிட்டாள். இனி ஆயிர மாயிரமாகக் கொட்டிக் கொடுத் தாலும் அது வரப்போகிறதா?

"அம்மா... அம்மா"

"யாரது?"

"வேலைக்காரிங்க!"

"ஏன்? என்னவேணும்?"

"சாணம்"

"சாணம்—சட்டி—எல்லாம் இருக்கவேண்டிய இடத்துலே தான் இருக்கும்......எடுத்துத் தெளிச்சுட்டுப் போ"

"அம்மா எங்கேங்க?"

"அதைப்பத்தி உனக்கென்னு கவலை?" எனக்கிருக்கும் எரிச் சல் அவளுக்கென்ன தெரியும்!

சிறிதுநேரங்கழித்து 'சளக் சளக்'கென்று வாசலில் சாணந் தெளிக்கும் சத்தம். திரும்பவும் வீட்டிற்குள் வேலைக்காரியின் காலடி ஓசை! அதைத்தொடர்ந்து சாணம் கரைத்த பாத்திரத்தை 'லொட்' என்று நின்ற நிலையில் போடுவதுபோன்ற சத்தம்.

அவள் கேள்விக்குச் சரியான முறையில் நான் பதில் கொடுக்க

வில்லையென்று அவளுக்குக் கோபம்போலும்! எனக்கு ஏற்பட்ட கோபத்தை, நான் அவளிடம் காட்டினேன். அவள் தனக்கேற்பட்ட கோபத்தைப் பாத்திரத்தின்மீது காட்டுகிறாள். நியாயந்தானே!

எனக்கு அப்பொழுது மாலா சொன்னது நினைவிற்கு வந்தது.

"அவ கை கொஞ்சம் நீளம்"

"நீளமா இருந்தா இருக்கட்டுமே, என்ன எடுத்துக்கிட்டுப் போயிடுவா?" என்று தத்துவம் பேசிற்று மனம். எப்பொழுதுமில்லாமல் இந்த மனம் இப்படித் தத்துவம் பேசக் காரணம், படுக்கையை விட்டு எழுந்திருக்க விரும்பாத சோம்பல்!

பால்காரன் இன்னும் வரவில்லை. அவன் வந்தாலாவது காப்பி போட்டுக் குடிக்கலாம். அருமையாகக் காப்பி தயாரித்து மாலா வந்தவுடன் அவளுக்குக் கொடுக்கவேண்டும். நான் இவ்வளவு அருமையாகக் காப்பி தயாரித்திருக்கிறேனே என்று அவள் பிரமிக்கவேண்டும் நம்மை ஒன்றுக்கும் உதவாக்கரை என்று நினைத்துக்கொண்டிருக்கும் அவளுக்கு நான் என் திறமையை விளக்கவேண்டாமா?

"சாமி...பாலுங்க" என்ற குரல், சரிதான்! பால்காரன் வந்துவிட்டான். இனி நம் வேலையைத் துவக்கவேண்டியதுதான்.

பித்தளை டம்ளர் ஒன்றைக் கழுவி எடுத்துக்கொண்டுபோய்ப் பாலை வாங்கிக்கொண்டு வந்து அடுப்புமேடைமேல் வைத்தேன். அடுப்பை மூட்டவேண்டும்.

நாலைந்து விறகுக் கட்டைகளை ஒன்றாய் சேர்த்து அடுப்பிற்குள் திணித்தேன். மண்ணெண் ணெயை அதில் கொட்டினேன். வத்திப்பெட்டி! அதைக் காண வில்லை. அதைத் தேடுவதற்குள் ஊற்றிய மண்ணெண்ணெய் எல் லாம் காற்றோடுகலந்து விடும் போலிருக்கிறதே...சுங்கஇலாகா அதிகாரிகள் மூட்டை முடிச்சு களையும் ஆசாமிகளையும் சோதனை போடுவதுமாதிரி, அடுப்பங்கரை எங்கும் துழாவினேன். அப் பாடி! அந்தப் பொல்லாத வத்திட்பெட்டி, கடுகு கொட்டி வைத்திருக்கும் தகர டப்பா விற்குப் பின்னால் ஒளிந்துகொண் டிருந்தது. தேடி எடுத்து அதைத் திறந்து பார்த்ததில் ஆச்சரியம்தான் மிஞ்சியது. காரணம், அதில் ஒரே ஒரு தீக் குச்சிதான் இருந்தது.

தீக்குச்சியை எடுத்துப் பற்ற வைத்தவுடன், அது பக்கென்று அணைந்து விட்டது. தீக்குச்சி வேண்டும். இப்பொழுது என்ன செய்வது? விடிந்ததும் விடியா ததுமாகப் பக்கத்து வீட்டில் கடன் கேட்பதா? இப்பொழுது தான் ஆறு மணி. கடை திறந் திருக்கும என்ற நம்பிக்கைக்கும் இடமில்லை. இப்பொழுதெல் லாம் எட்டு மணிக்குத்தானே கடையைத் திறக்கின்றார்கள்.

தெரு வாயிற்படியில் போய் நின்றேன். தெரிந்தவர்கள் யாரா வது வருவார்கள்—இரண்டு தீக்குச்சி இரவல் கேட்கலாம் என்ற எண்ணம்! சொல்லிவைத் தாற்போல் முகந்தெரிந்த மனி தர்கள் ஒருவருமே வரக்காணோம். என்ன செய்வது? எத்தனை நேரம் நிற்பது?

தெருவில் ஒரு ஆசாமி போய்க் கொண்டிருந்தான். முண்டாசு—கிருதா – இரண்டாக மடித்துக் கட்டிய வேட்டி–இவைகளுடன் முக்காலே மூணுவீசம் ரௌடி மாதிரி! இருக்கட்டுமே! நாம் என்ன அவனுடன் சண்டைக்கா போகப் போகிறோம், பயப்பட? இரண்டு தீக்குச்சி இரவல் கேட்கப்போகிறோம்! அவ்வளவு தானே!

"இந்தாப்பா"

அவன் திரும்பி நின்று பார்த் தான்.

"என்னையா கூப்பிட்டே?"

"ஆமாம்"

"என்ன வேணும்?"

"ஒண்ணுமில்லே......ரெண்டு தீக்குச்சி வேணும்."

"ஏன்? சுருட்டு, பீடி பத்த வைக்கவா?"

'இல்லை அடுப்புப் பற்ற வைக்கப் போகிறேன்' என்றால் அவன் என்ன நினைத்துக் சொள் வான்? ஓஹோ! இவன் ஒரு பெண்டாட்டி தாசன் போலிருக் கிறது என்றுதானே நினைத்துக் கொள்வான்!

"சுருட்டுப் பத்தவைக்கணும்" என்றேன் நான் அவனிடம்.

அவன் தன் விரலிடுக்கில் கனன்று புகைந்து கொண் டிருந்த சுருட்டை என் முன் நீட்டினான். நான் விழித்தேன்.

"நெருப்பு வேணும். நெருப்புக் குச்சிதான் வேணும். நான் சுருட்டுப் பத்த வைக்கிறது யாருக்கும் தெரியாது. மறைவாத் தோட்டத்துப் பக்கம் போயிடுறது" என்றேன் உயிரற்ற புன் சிரிப்புடன்.

கடைசியில் அவன், தன் மடியைத் திறந்து தீப்பெட்டியை எடுத்து நாலைந்து தீக்குச்சிகளைக் கொடுத்தான்.

வீட்டிற்குள் சென்றேன். என்ன ஆச்சரியம்! அடுப்பு மேடையிலிருந்த பாலைப் பூனை ருசி பார்த்துக் கொண்டிருந்தது. எனக்கு வந்த கோபத்திற்கு எல்லையே கிடையாது. கோபமெல்லாம் பாலைப் பத்திரமாக மூடி வைக்காத என் முட்டாள் தனத்தின் மீதல்ல; பூனையின் மீது தான்!

காலடி ஓசைகேட்டுப் பூனை மெள்ள நழுவ ஆரம்பித்தது. நானா விடுபவன்? பக்கத்தில் கிடந்த ஒரு காலி டம்ளரை எடுத்துக்கொண்டு அதைத் தொடர்ந்தேன். அது கொல்லைப்புறம் ஓடியது. கையிலிருந்த டம்ளரால் அதைக் குறிவைத்து அடித்தேன். குறி தவறவில்லை; என்றாலும் அது ஓடிவிட்டது.

அடுப்பங்கரைக்கு வந்தேன். பூனையின் எச்சிற் பட்டுவிட்ட பாலைப் பார்த்தேன். மாலா நினைப்பதுபோல் ஒன்றுக்கும் நான் உதவாக்கரை தானே? மீண்டும் அடுப்பிற்குள் திணிக்கப்பட்டிருந்த விறகுத் தலையில் மண்ணெண்ணெய் அபிஷேகம். தீக்குச்சி தன் கடமையைச் செய்தது. பால் பாத்திரத்தில் எச்சிற் பாலை ஊற்றி அடுப்பின் மேல் தூக்கி வைத்தேன்.

அடுப்பு நன்றாக எரிந்தது. பால் சூடேறிப் பொங்க ஆரம்பித்தது. பொங்கி அடுப்பில் வழிந்து விடுமே என்ற அவசரத்தில் இறக்கி வைக்கப் பால் பாத்திரத்தைப் பிடித்தேன். விரல்களில் நன்றாகச் சுட்டுவிட்டது. தேள் கொட்டி விட்டதைப் போல் உதறிக்கொண்டு கிடந்தேன். பழக்கமில்லாத காரணத்தால் கரித்துணி என் பார்வையில்பட்டும் உபயோகத்திற்குள்ளாகவில்லை. அதை எடுத்து பால் பாத்திரத்தைத் திரும்பவும் நான் இறக்குவதற்குள் பொங்கி வழியவேண்டிய பாலெல்லாம் வழிந்து அடுப்பும் அணைந்து விட்டது. எஞ்சியது ஒரு சிரங்கைப் பால்தான்!

சிறிதுநேரம் கழிந்தது. மாலா வந்துவிட்டாள்.

"என்ன... பால்காரன் வந்தானா? வேலைக்காரி வந்தாளா?" முறையே கேட்கவேண்டிய கேள்விகளையெல்லாம்கேட்டாள். வரவழைத்துக்கொண்ட பொறுமையுடன் பதில் சொல்லிமுடித்தேன்.

"அது போகட்டும்... காப்பி போட்டுட்டீங்களா?" என்றாள். நான் பதில் பேசவில்லை!

கொடியில் கிடந்தபுடவையை எடுத்துக்கொண்டு புடவை மாற்ற அடுப்பங்கரைப் பக்கம் சென்றாள்.

“இந்தாங்கோ...நீங்க காப்பி போட்ட லட்சணத்தை அடுப்புக்குள்ளே திணிச்சி வெச்சிருக்கிற வெறகும் பொங்கி வழிஞ்சி காலியாக் கெடக்குற பால் பாத்திரமும்...வேடிக்கைதான். ம்... அது தொலையட்டும். நீங்க காப்பி சாப்புட்டீங்களா? இல்லியா?”

“எப்படிச் சாப்பிடுறது?”

“போகட்டும் தெருக்கோடியிலே இருக்குதுல்லே செவந்திக்கோனுன் வீடு அங்கு சுத்தமான பால் கிடைக்குது. அலுப்புப் பாக்காமே போய் அரைச்சேர் வாங்கியாங்க. சித்தே நாழியிலே காப்பி வச்சுத் தர்ரேன்”

“சரி...பால்வாங்கப் பாத்திரங் கொடு”

“ஏன்னு? இங்கே கிடந்ததே புளூ டம்ளர். அதெக் காணவியே” என்றாள் அவள்.

“நல்லாப் பார் எங்கே போயிடும்? இங்கேதான் இருக்கும்” என்றேன்.

எனக்கு அப்பொழுதுதான் வேலைக்காரி ஞாபகம் வந்தது. ஒரு தடவைக்கு இரு தடவையாக என்னை எச்சரிக்கை செய்தாள், மாலா. நான் தான் அசட்டையாக இருந்தேன். அவள் சொல்லிவிட்டுப்போனது உண்மையாகிவிட்டது.

“நான் அப்பவே நூறு தடவை சொன்னேன், வேலைக்காரி வரும்போது கொஞ்சம் ஜாக்கிறதையா இருங்கோ, அவ கை கொஞ்சம் நீளம்னு! இப்பப் பாருங்கோ, நான் சொன்னது சரியாயிட்டுது!” என்று பொரிந்தாள்.

“சனியன் தொலெஞ்சுது அத்தோடு நம் பீடையும் விட்டது போ. ஒரு செம்பு தண்ணி குடு. முகங்கழுவி விட்டு, பால் வாங்கி வர்ரேன்” என்றேன், நான்.

“ஒரு பொட்டுத் தண்ணி கூட இங்கே கிடையாது! கொஞ்சம் இருங்கோ இதோ வந்துட்டேன்” என்று குடத்தை எடுத்துக்கொண்டு கொல்லைக் கிணற்றை நோக்கி நடந்தாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம், “சட்டுன்னு இங்கே வாங்களேன்” என்று கொல்லையிலிருந்தபடியேகூவினுள், மாலா. என்னவோ ஏதோவென்று ஓடினேன்.

“ஏன்னு? இந்த டம்ளர் தோட்டத்துக்கு எப்படி வந்திச்சி?”

எனக்கு அப்பொழுதுதான் நினைவிற்கு வந்தது. பூனையை அடித்த டம்ளரைத் திரும்பநான் உள்ளே எடுத்து வரவில்லை!

நடந்ததைச் சொன்னேன். மாலா சிரித்தாள்!

“இதோ பார், மாலா தீர விசாரிக்காமே திடீர்ன்னு ஒருத்தர் மேலே அபாண்டமாச் சொல்லக் கூடாது” என்றேன்.

“எல்லாத் தப்பும் உங்க பேரிலே தான். திரும்ப டம்ளரை உள்ளே எடுத்து வைத்திருந்தா, இத்தனை கேள்விக்கும் சந்தேகத்திற்கும் இடமிருக்காதே!...” என்றபடி கிணற்றை நோக்கி அழகுநடை போட்டாள் மாலா.

List of Prize winners of P. No. 1. (1) V. Kumar, Hyderabad Dn. (2) N. Sahu, Puri. (3) P. S. Rao, Poona. (4) V. Raman, Cochin. (5) Manoharlal, New Delhi, (6) A. N. Rao, Bangalore. (7) B. Thakur, Behar. (8) J. N. Chaturvedi, Calcutta & 16 others. In addition 2 persons are awarded 2nd prize, 55 the 3rd & 12 the 5th prize.

Full particulars are published in the Rainbow dated *25-1-52*

ரிஜிஸ்டர் நெ. 277 **ரூ. 25,000 பரிசு** போட்டி நெ. 3

M S Premier Bank of India Ltd·ல் *சீல்* செய்துவைக்கப்பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியானவிடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000 முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு *5*-ம் பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் சீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும்.

AMBAL'S PUZZLES

KEY S. NO. 1 · 1 TO 16 = 34

4	9	5	16
14	7	11	2
15	6	10	3
1	12	8	13

We hereby certify that the above is the solution in original deposited with us by *Ambal's Puzzles No.* 1 on 20-12-51 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.

V. Ramanathan 12-1-52
Agent. Madras

முடிவு தேதி 12-2-52 விடை 27-2-52

பிரவேசக் கட்டணம் : கூபன் *1*-க்கு ரூ. *1-0-0* 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5-0-0

70

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 10 முதல் 25 வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் 70 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும், அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

AMBAL PUZZLE NO. 3

28 (14) Thandavaraya Gramani Street, Tondiarpet, MADRAS - 21

ஐந்தாண்டுத் திட்டம்

அ. வெ. தியாகராஜா

நம்முடைய நாட்டில் இன்றுஉண்ண உணவுப் பொருள்கள் கிடைக்கவில்லை. அணியும் ஆடைக்குத் துணி கிடைக்கவில்லை. மனிதனுக்கு மிக அவசியமான பொருள்களெல்லாம் கிடைப்பது அரிதாகிவிட்டது. இந்நிலையில் பொதுமக்கள் யாவரும் அவரவர் குடும்பத்தை நிதானமான முறையிலாவது நடத்திவருவது மிகக் கஷ்டமாகிக் கொண்டே வருகிறது. இதை நாட்டை ஆளும் கூட்டத்தினர் கவனியாதிருப்பின் நிலைமைஇன்னும்மோசமகிவிடும்.

முன்னாளில், சிலவருடங்கட்கு முன்னர்கூடக் கையில் காசெடுத்துச் சென்று ஒரு மூட்டை அரிசியை நம் தந்தையர் வாங்கி வந்தனர். இன்று நாம் பையில் பணத்தை எடுத்துச் சென்றால் தான் ஒரு மூட்டை அரிசி வாங்க முடிகிறது. நமக்குப் பின் வருவோர் சாக்குப் பைகளில் நோட்டைக் கட்டி ஒரு வண்டி நோட்டைக் கடையில் தள்ளினால்தான் ஒரு மூட்டை அரிசி வாங்கும் நிலையும் ஏற்பட்டு விடலாம். இன்றிருக்கும் நிலையில் இது நடவாது என்று கூற எவரும் துணிவு கொள்ளார்.

இந்த நிலைமையை மாற்றியமைத்துவிட வேண்டும் எனக் கூறி நம்முடைய இன்றைய அரசாங்கம் ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறது. அத்திட்டத்திற்கு ஐந்தாண்டுத் திட்டம்எனப் பெயரிட்டிருக்கிறார்கள். 1951 முதல் 1955ம் ஆண்டு முடிவதற்குள் சில திட்டங்களை நிறைவேற்றி அதன் மூலம் நாட்டைச் செழிப்படையச் செய்வதாகவும், நாட்டின் தொழில்களை அபிவிருத்தி செய்வதாகவும், மக்களின் படிப்பு, சுகாதாரம், வாழ்வு, கலை முதலியவற்றை ஓரளவிற்கு உயர்த்துவதாகவும் ஐந்தாண்டுத் திட்டத்தில் சொல்லப்பெறுகிறது.

அன்றாட வாழ்வின் சுற்றியுள்ள சூழ்நிலையால் அவதிப்படும் மக்கள் ‘இத்திட்டம் குறித்தபடி சரியாக நிறைவேறாதா? மனித வாழ்வு சுகம் பெறாதா?’ என்று ஆவலுடன் எதிர்பார்ப்பார்கள் என்பது திண்ணம். ஆனால் இது நடைபெறுமா நடைபெறாதா என்று சிந்திக்கும் சிலர், இத்திட்டம் சரியானபடி நிறைவேறாது போனாலும் போகலாம் என்றே எண்ணுகின்றனர். ராஜீயவாதிகளாக இல்லாத என் போன்றோர் இதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

ஐந்தாண்டுத் திட்டத்தில் சில குறைபாடுகள் இருக்கின்றன என்று அரசாங்கத்தைச் சேர்ந்த சிலர் கூற ஆரம்பித்திருக்கின்றனர். இத்திட்டத்தால் நாட்டிற்கு எவ்வித பிரயோஜனமும் கிடைக்கப் போவதில்லை எனச் சிலர் புத்தகங்கள் எழுதி வெளியிட்டுவிட்டனர். இவற்றை எல்லாம் ஊன்றிப் படிக்காத மக்கள் கூட இத்திட்டத்தில் நம்பிக்கை கொள்ள மறுக்கின்றனர். இதற்குக் காரணம் இத்திட்டத்தை உண்டாக்கியவர்கள் மீது நம்பிக்கை இன்மையே யாகும். அதோடு இத்திட்டத்தை நடத்தப் போகிறவர்கள் மீது ஏற்பட்டுள்ள நம்பிக்கைக் குறைவுமாகும்.

இந்தியா சுதந்திரம் அடைந்து சுமார் ஐந்து ஆண்டுகள் ஆகின்றன. இந்தக் காலத்தில் கள்ளமார்க்கட்டை ஒழிக்க அரசாங்கம் முயற்சி எடுப்பதாசுக் கூறினார்கள். அது இன்னும் ஒழிந்த பாடில்லை. விலைவாசிகளைக் குறைப்பதற்காக எவ்வளவோ முயற்சி எடுப்பதாச் சொன்னார்கள். விலைவாசிகள் குறையவே இல்லை. ஆனால் அதிகரித்துக் கொண்டே செல்லுகின்றன.

நாட்டின் நலன் கருதி, சிந்திரி என்ற இடத்தில் நிலத்திற்கு உரம் தயார் செய்வதற்காக ஒரு தொழிற்சாலையை நிறுவினர். அதனால் இன்றுவரை நாட்டிற்கு அதிக பலனில்லை. கோடிக்கணக்கில் வரியாக வசூலித்த பணம் அதில் நட்டமாகி இருக்கிறது எனத் தெரிகிறது. வீடு கிடைக்காமையை ஒழிக்க உடனடியாக நிறுவக்கூடிய வீடுகள் செய்வதில் சில கோடி ரூபாய்கள் செலவாயின. அதனால் என்ன பிரயோஜனம் ஏற்பட்டது என்பது யாருக்குமே தெரியவில்லை. நிலத்திற்கு நீர்ப்பாசனம் செய்யப் பலவிடங்களில் அணைக்கட்டுகள் கட்டுவதற்கு திட்டமிட்டார்கள். சில விடங்களில் வேலையையும் துவக்கினார்கள். பணம் கோடிக் கணக்கில் விரயமாகிக் கொண்டிருப்பது நமக்குத் தெரிகிறது. ஆனால் எத்தனை லட்சம் ஏக்ராக்களுக்கு இன்று புதிதாக நீர்ப்பாசன வசதி செய்ய முடிந்திருக்கிறது என்பது தெரியவில்லை.

சீன நாடு சுதந்திரமடைந்து இரண்டு ஆண்டுகள் தான் ஆகின்றன. அந்நாடு சுதந்திரம் அடைவதற்கு முன் அதைவிடப் பஞ்சத்தால் அவதிப்பட்ட நாடு உலகில் வேறெந்த நாடும் இல்லை என்று கூடச் சொல்லலாம். ஆனால் அந்நாட்டில் இப்பொழுதுள்ள குடியரசு ஆட்சியின் பெருமையை கண்டு வந்த நம் நாட்டு மக்கள் அதை வாயாரப் புகழுகின்றனர். நம் நாட்டிலிருந்து சமீபத்தில் சீனாவுக்குச் சென்று திரும்பியபேரறிஞர்கள் சொல்லுகிறார்கள். இராஜீயவாதிகளில்லாத மதிப்புக்குரிய மக்கள் சொல்லுகிறார்கள். நம் அரசாங்கத்தின் பிரதிநிதியான திரு. பணிக்கர் அவர்களே சொல்லுகிறார்கள். அந்நாட்டில் பஞ்சம் நீங்கிவிட்டது என்கிறார்கள். அத்துடன் நில்லாமல்



அவர்கள் உலகிலுள்ள பிற நாடு களுக்கும் உணவுப்பொருள்களை ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையையும் அடைந்திருக்கிறார்கள் என மொழிகின்றனர். இரண்டு ஆண்டுகளுக்குள் இந்நிலை அவர்கட்கு எப்படிச் சாத்தியமாயிற்று? நம் நாடு சுதந்திரம் பெற்று ஐந்து ஆண்டுகளாகியும் பஞ்ச நிலை நீங்காததற்குக் காரணம் என்ன?

ஐந்தாண்டுத் திட்டம் ஒழுங்காக நடைபெறவேண்டுமாயின் முதலாவதாக, காந்தியடிகள் சொன்னது போல் காங்கிரசைக் கலைத்துவிட வேண்டும். ஆளும் கூட்டத்திற்கு அதைக் கலைக்க மனமில்லையானாலும், ஆங்கிலேயர் இந்த நாட்டை ஆண்ட காலத்து அவர்களுடன் கூட இருந்து ஆண்டு அனுபவம் பெற்ற மக்களை எல்லாம் ஆளும் கூட்டத்துடன் சேர்த்துக் கொண்டு அவர்களின் யோசனைகளும் நாட்டுக்குப் பயன்படும்படி செய்யவேண்டும்.

இரண்டாவதாகக் கண்ட்ரோல்களை எல்லாம் உடனடியாக எடுத்துவிடவேண்டும். அல்லது கண்ட்ரோலை ஒவ்வொன்றாகத் தளர்த்தி ஒரு குறிப்பிட்ட குறைந்த காலத்திற்குள் கண்ட்ரோல் இல்லாது செய்துவிடவேண்டும். கண்ட்ரோல்தான் கள்ளமார்க்கெட்டுக்கும், கனமான லஞ்சத்திற்கும் காரணமாக இருக்கிறது.

மூன்றாவதாக, நாடு முழுவதையும் ஏக காலத்தில் அபிவிருத்தி செய்ய ஆசை கொள்ளக்கூடாது. இது நடைமுறையில் செய்ய முடியாத காரியமாகப் போய்விடும். ஐந்து வருடங்களில் யாவற்றையும் செய்து விடுவதாகச் சொல்லி ஒன்றும் ஆகாமல் போவதைவிட, குறிப்பிட்ட சிறிதளவாவது நிச்சயமாகச் செய்து முடித்தால், அந்த அளவிற்கு நாட்டிற்குப் பயன் உண்டு.

ஓடாத கடிகாரம்

நாஜு

பயங்கரமான இரவு! சிகாகோ நகரத்தைச் சேர்ந்த ஒரு பாழடைந்த வீதி ஆள் நடமாட்டமில்லாது அனாதையாகக் கிடந்தது. தெரு விளக்குகள் மங்கலாக எரிந்து கொண்டிருந்தன. விர்ரென்று இரைச்சலுடன் வேகமாக ஓடிவந்த ஒரு காரானது கொஞ்சங்கூட வெளிச்சமில்லாத இடத்தில் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு பிரமுகர் மெதுவாக் இறங்கினார். கனவான் இறங்கியதும் கார் அவ்விடத்தை விட்டுக் கிளம்பியது. நடைகம்பைக் கான்கிரீட் தளத்தில் அடிக்கடி ஊன்றிக்கொண்டே காரிலிருந்து இறங்கிய புரொபஸர் தள்ளாடித் தள்ளாடி நடக்க ஆரம்பித்தார்.

புரொபஸருக்குக் கண்ணுக் கெட்டிய தூரத்தில் இருக்கும் அவரது பங்களா வாசல் தெரியவில்லை. நல்ல குடிவெறி. இரும்புக் கம்பி என்று உணர்ச்சியில்லாமல் அவர் அதைப் பிடித்து உலுப்பிக்கொண்டு நின்றார். அப்போது அவருக்குச் சுமார் பத்து அடி தூரத்தில் ஒரு துப்பாக்கி தன் வாயைத் திறந்து, இரண்டு மூன்று ரவைகளை அலட்சியமாக உதிர்த்தது. புரொபஸர் கணத்தில் பிணமானார்.

மறுநாள் இச்சம்பவம் பத்திரிகையில் வெளிவந்தது. துப்பறியும் குழுவினர் பரபரப்போடு நகரெங்கும் ஓடியாடித் திரிந்தனர். குற்றவாளியைக் கண்டு பிடிப்பதற்கேதுவான தடயங்களைத் தேடினர். இறுதியில் இந்தக் கொலை நடந்த இடத்தில் ஒரு துப்பாக்கியும் தொப்பியும் போலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டன. எல். எம். என்ற இரு எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்த அந்தத் துப்பாக்கியை ஆதாரமாகக் கொண்டு, அதன் சொந்தக்காரனை லாரன்ஸ் மால்கம் என்பவனைப் போலீஸார் கைதுசெய்தனர்.

லாரன்ஸ் மால்கம் தந்தி ஆபீஸில் வேலைபார்க்கும் சாதாரணக் குமாஸ்தா. ஆபீஸிலும் மற்றும் அக்கம்பக்கத்தில் குடியிருப்பவர்களிடமும் ரொம்பவும் நல்லபிள்ளை என்ற பட்டம் பெற்றவன். இரவு பத்து மணிக்கு மேல் அவன் அறையைவிட்டு எந்தக் காரணத்திற்காகவும் வெளியே போவது கிடையாது. கேளிக்கை மண்டபங்கள், தியேட்டர்கள் இங்கெல்லாம் அவன் நண்பர்களின் வற்புறுத்தலுக்காக அல்லாமல் தனித்துச் செல்வதில்லை. அவன் மேல் சுமத்தப்பட்டிருக்கும் இந்தக் குற்றச்சாட்டைக் கண்டு நண்பர்களும் உறவினர்களும் பெரிதும் பரிதாபப்பட்டனர். ஆனால் மால்கத்திற்காக அவர்கள் இம்மியளவு கூட உதவிசெய்ய வழியில்லை.

மால்கம்தான் அந்தக் கொலேக் குற்றத்தைச் செய்தவன் என்பதற்குப் பல காரணங்களைப் போலீஸார் கூறினர்.

கொலைநடந்த இரவு வழக்கத்திற்கு விரோதமாக மால்கம் அவனுடைய அறையில் இல்லை. சம்பவம் நடந்தது இரவு சரியாகப் பனிரண்டு மணிக்கு. அப்போது அவன் அறையில் இல்லை என்பதை நிரூபிக்கச் சான்றுகள் இருக்கின்றன. மால்கமும் அதை மறுக்கவில்லை. துப்பாக்கியும் தொப்பியும் சந்தேகமில்லாமல் அவனுடையவைதான். இதையும் மால்கம் ஒப்புக் கொள்கிறான். ஆனால் கொலை செய்தது தான் அல்லவென்று அவன் கோர்ட்டில் அலறினான். சட்டம்-அதற்கு வேலியாக அமைந்த டிரைவர் மைக்கேலின் சாட்சியம் — மற்றும் அந்தச் சாட்சிக்குச் சாதகமாக அமைந்துள்ளபொருள்கள் யாவும் மால்கத்தின் கூற்றை மெய்ப்பிக்க முடியவில்லை.

கொலைத் தீர்ப்புவிதிக்கப்பட்டது. ஆயுள் தண்டனையடைந்த மால்கம் பிரதம சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். சிறையில் அடைபட்டிருந்தும் அவன் மனம் ஓயவில்லை. எப்படியும் அன்று நடந்த சம்பவங்களைப் பொது மக்களுக்கு விளக்கமாகத் தெரியப்படுத்திவிட வேண்டுமென்று அவன் உள்ளம் துடியாய்த்துடித்தது. உண்மை தெரிந்தபிறகாகிலும் அப்பீலில் தனக்குச் சாதகமான தீர்ப்புக் கிடைக்கும் என்பது அவன் நம்பிக்கை. எனவே, தனக்குத் தெரிந்த ஒரு பத்திரிகை நிருபருக்கு அழைப்பு அனுப்பினான். குறித்தநேரத்தில் ரிப்போர்ட்டரும் மால்கத்தைச்

சிறையில் சந்தித்தார். இருவரும் நீண்ட நேரம் உரையாடினர். மறுநாள் வெளிவந்த தினப்பத்திரிகை ஒன்றில் மால்கம் வெளியிட்ட வாக்குமூலம் அப்படியே வெளியாகியிருந்தது.

* * *

"அன்று நேரங்கழித்து ஆபீஸிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். மூடுபனி எங்கும் படர்ந்திருந்தது. குளிருக்காக ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைக்கப் போகும்போது, நெருப்புக்குச்சி வெளிச்சத்தில் எனக்கு இடது கைப்புறம் தெரு ஓரமாக இருவர் நின்றுகொண்டு என்னையே கவனித்துக் கொண்டிருப்பதாகத் தெரிந்தது. அப்போது மணி பத்து.

'மெதுவாக நடக்க ஆரம்பித்தேன். அவர்களும் என்னைப் பின்தொடர்ந்தனர். அவர்கள் இருவரும் எனக்குப் பழக்கமானவர்கள் அல்ல' ஆனால் அறிமுகமானவர்கள். கைதேர்ந்த சிறைப் பறவைகள். திருடுவது அவர்கள் தொழில். ஒருமுறை அவர்களுக்கு எதிராக நான் போலீஸாருக்குச் சாட்சி சொன்னேன். அதனால் அவர்கள் இருவருக்கும் ஓராண்டு சிறைத் தண்டனையும் கிடைத்தது. அன்றுதான் அவர்கள் விடுதலையாகி வந்திருக்க வேண்டும். என் மேல் அவர்களுக்கு உள்ள கோபம் இன்னும் தணியவில்லை போலும். நானும் முன்னெச்சரிக்கையுடன் ரிவால்வரைத் தடவிப் பார்த்துக்கொண்டு முன்னேறினேன். சந்துத் திருப்பம் வந்தது. இருபுறமும் எங்களைத் தவிர ஆள் நடமாட்டம் அணுவளவும் இல்லை. இதுதான் தக்க சமயமென்று அவர்களில் ஒருவன் என்னை நோக்கிச் சுட்டான். நானும் திரும்பிச் சுட்டேன். ஆனால் அவன் துப்பாக்கியிலிருந்து குறிதவறாது பாய்ந்துவந்த இரண்டாவது குண்டு என் உள்ளங்கையில் தைத்தது. என் துப்பாக்கி நழுவிக் கீழே விழுந்துவிட்டது. கைவழியே இரத்தம் கசிந்து வழிந்தது. கீழே விழுந்த துப்பாக்கியைக் கூட எடுக்க மனமில்லாமல் விழுந்தடித்துக் கொண்டு ஓடினேன். எதிரே இருந்த சுவரில் மோதி ஓடும்போது தொப்பியும் தவறிக் கீழே விழுந்துவிட்டது. அந்த இரண்டு பொருள்களையும் கொலைகாரர்கள் தகுந்த சாட்சியங்களில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

"காயத்தோடு நான் தெருவழியே ஓடினேன். அவர்களும் என்னை விடாது விரட்டி வந்தார்கள். சுற்றுமுற்றும் பார்த்தேன். ஒரு வீட்டிலாவது விளக்கு வெளிச்சம் காணப்படவில்லை. மீண்டும் ஓடினேன். எங்கும் நிற்காமல் ஓடிவந்தவன் ஒரு வீட்டு வாசல்முன் சில கணங்கள் நின்றேன். அந்த வீடு ஒன்றுதான் மூடப்படாமல் திறந்து கிடந்தது. விரைவாக உள்ளே நுழைந்து கதவைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு வெளிப்புறம் நோக்கினேன். திருடர்கள் இருவரும் அந்த

வீட்டைத் தாண்டி, அப்புறமும் ஓடிக்கொண்டிருந்தனர். நான் அமைதியுடன் ஹாலை நோக்கி நகர்ந்தேன்.

"அங்கே...

"கனலடுப்பிற்கு எதிரே ஒரு வயது சென்ற கிழவி உட்கார்ந்து ஏதோ படித்துக் கொண்டிருந்தாள். திடுதிப்பென்று உத்தரவின்றி நுழைந்து உள்ளும் புறமும் திருடனைப் போல் மிரண்ட பார்வையோடு பார்த்துக்கொண்டு நின்றாலும், அவள் என்னைச் சிறிதும் சந்தேகிக்கவில்லை. நான் யார், என்ன, ஏன் என்று ஒன்றும் கேட்கவில்லை. கையிலுள்ள காயத்திற்கு மருந்துபோட்டுக் கட்டினாள். பசியாற உணவும், ஒரு கோப்பை நிறையச் சூடாகக் காப்பியும் தந்து அன்போடு உபசரித்தாள். நான் வேடிக்கையோடு அவள் காரியங்கள் ஒவ்வொன்றையும் ரசித்துக் கொண்டிருந்தேன். கிழவியின் உபசாரம் எனக்குப் புரியாத புதிராயிருந்தது. கிழவி எதுவும் கேட்காவிட்டாலும் என் மனம் கேட்கவில்லை. நானாகவே நடந்த கதையைக் கூறினேன். அவள் மிகவும் வருத்தப்பட்டாள். போக விடைதர வேண்டினேன். புன்முறுவலோடு தலையை மட்டும் இலேசாக அசைத்தாள். அவள் கண்களின் ஓரத்தில் நீர்த்துளிகள் இரண்டொன்று காணப்பட்டன. ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. கலவரத்தோடு வீடுவந்து சேர்ந்தேன். மறுநாள் கொலைக்குற்றம் சாட்டப்பெற்று ஆயுள் தண்டனை பெற்றேன். என் வழக்கு அப்பீலில் இருக்கிறது. எனக்காக வாதாடுபவர் யாருமில்லை, அந்த ஹனோவர் மாளிகையில் வசிக்கும் சீமாட்டியைத் தவிர. அவளையே நம்பியிருக்கிறேன்.

—லாரன்ஸ். ஏ. மால்கம்."

* * *

கோர்ட்டில் கிழவி ஆஜராகிச் சாட்சியம் கூறினாள். ஜூரிகள் வழக்கை மீண்டும் பரிசிலனை செய்தபிறகு, இவ்வழக்கு சம்பந்தமாக ஓரே ஒரு கேள்வி மட்டுமே கேட்க விரும்பினர். அந்த ஒரு கேள்வியும் கேட்கப்பட்டது. கிழவி மறுமொழி கூறினாள். வழக்கை நீதிபதிகள் தள்ளுபடி செய்தனர்! மால்கமும் விடுதலை பெற்றான்!

இரவு சரியாகப் பனிரண்டு மணிக்கு மால்கம் ஹனோவர் மாளிகையில் இருந்தானா என்பதே அக்கேள்வி.

"ஆம். சரியாகப் பனிரெண்டு மணிக்கு என் வீட்டிலிருந்தான்." என்று அழுத்தந் திருத்தமாகக் கிழவி கூறிவிட்டாள்.

விடுதலை பெற்ற மால்கம் தன்னை விடுவித்த சீமாட்டியைக் காண ஓடினான். அவள் ஏன் தனக்காகப் பொய் சொல்ல வேண்டுமென்ற சந்தேகம் அவனுக்கு!

"அம்மா, சரியாகப் பனிரண்டு மணிக்குள் நான்

இதைவிட்டுப் புறப்பட்டு விட்டேன். எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. நீங்கள் ஏன் பொய் சொல்லவேண்டும்?" என்று மால்கம் ஆர்வத்துடன் கேட்டான். மூதாட்டி மெதுவாக, "இளைஞனே, நான் பொய் சொல்லவில்லை. உனக்காகக் கோர்ட்டில் என் தாய்மை பேசிற்று. அன்று அடிபட்டு ஓடிவந்து என்னைக் கேளாமல் அடைக்கலம் அடைந்த போதும் என் தாய்மைதான் உனக்கு ஆதரவளித்து வேண்டிய பணிவிடைகள் செய்தது. மகனே, எனக்குப் பிள்ளையில்லை. ஆனால் தாய்மை மறையவில்லை. மாறாகப் பன்மடங்கு அதிகமாயிருக்கிறது.

"உன்னைப்போல எனக்கு ஒரு மகனிருந்தான். அவனுக்கும் அப்பாவுக்கும் எப்பொழுதும் சண்டை. ஒருநாள் கோபித்துக் கொண்டு வீட்டைவிட்டுப் போனவன் மறைந்துநின்று தந்தைக்குப் பலவிதத்திலும் இடைஞ்சல் செய்தான். அதனால் கோபமுற்ற என் கணவர் அவனைச் சுட்டுக் கொன்றுவிடும்படி கடுமையான உத்தரவு பிறப்பித்துவிட்டார். ஒருநாள் என் மகன் என்னைக் காண வந்த சமயம் எங்கள் வீட்டு வேலைக்காரனொருவனால் சுட்டுக்கொல்லப்பட்டான். என் கணவரும் பிள்ளைப் பைத்தியம் பிடித்து அந்த வேலைக்காரனைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தானும் தற்கொலை செய்துகொண்டார். என் மகன் சுட்டுக்கொல்லப்பட்டது இரவு சரியாகப் பனிரண்டு மணிக்கு! என்வே அப்போது என்னால் நிறுத்தி வைக்கப்பட்ட கடிகாரம் இவ்வளவு நாளும் ஓடவில்லை. அந்தப் பனிரண்டு மணியிலேயே நிற்கிறது. நான் கூறியபடி நீ இங்கே இருக்கும்போது ஓடாத கடிகாரத்தில் மணி பனிரண்டுதான். கோர்ட்டில் நான் பொய் சொல்லவில்லை. உண்மையைத் தான் சொன்னேன்." என்று கூறி முடித்தாள்.

"அம்மா, என் உயிரைக் காத்த அந்தக் கடிகாரம் இனியும் ஓடாமல் ஏன் உறங்கிக் கிடக்க வேண்டும்? அதற்கு விடுதலை கொடுங்கள், ஓடட்டும்." என்று மால்கம் மகிழ்ச்சி பொங்கக் கூறினான்.

ஓடத் துவங்கிய கடிகாரம் மணி பனிரண்டு அடித்தது.

[ஆங்கிலக் கதையைத் தழுவியது.]

சினிமாப் படங்களில் பலவகை உண்டு. அவற்றுள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகைப் படங்கள் தாம் பிடித்தமானவை. ஆனால் எல்லாக் குழந்தைகளுக்கும் கார்ட்டுன் படங்கள் (Cartoon Pictures) என்ற நவீன வேடிக்கைச் சித்திரப் படங்கள் களிப்பைத் தருகின்றன. இப்படங்கள் சிறுவர்க்கு மட்டும் களிப்பைத் தருகின்றன என்றில்லை. ஆங்கிலப்படம் பார்க்கச் செல்லுகையில் ஒரு சிறு கார்ட்டுன் படமாவது இருந்தால்தான் நான் கொடுத்த காசுக்கு ஈடாகும் என்ற நினைப்பு எனக்கே ஏற்படுவதுண்டு!

உயிரற்ற உருவங்களின் இயக்கம் தென்னாட்டிற்குப் புதுமையானதல்ல. பொம்மலாட்டம் என்ற கலை தமிழகத்தில் சிறப்புடன் விளங்கிய காலம் உண்டு. பொம்மைகளை நடிகர்களாகக் கொண்டு நடத்தப்பெற்ற இந் நாடகங்களுக்கு அபாரமான கற்பனைத்திறனும், கைத்திறனும் தேவையாக இருந்தன. இக்கலை இன்று அறவே மறைந்து, அழியும் நிலையில் உள்ளது. மேனாட்டுச் சினிமாப் படங்கள் சிலவற்றில் பொம்மைகள் 'நடிப்பதை'க் காண்கிறோம். ஹவாய் நடனத்தையும், எஸ்கிமோ நடனத்தையும் தேடிப்பிடித்துக் காட்டி வரும் நம் நாட்டுச் சினிமாக் கலைஞர்களுக்கு இதில் ஏனோ இன்னும் நாட்டம் செல்லவில்லை! நமது கலைகளுக்குச்சினிமாமூலம் இந்தச் சிறு சேவையையாவது செய்யலாமல்லவா?

* * *

ஊமைச் சினிமாப் படங்கள் தோன்றுவதற்கு நெடுங்காலத்திற்கு முன்னரே 1831-ம் ஆண்டில் ஜோஸப் அன்டாய்னி பிளாட்டோ என்ற அறிஞர் இரு சக்கரங்களின் உதவியால் ஒரு மனிதன் ஓடுவதுபோன்ற தோற்றத்தை விளைவித்தார். அவர் இரு சக்கரங்களை ஒரே அச்சில் உள்ளவாறுபொருத்திவைத்தார்.

ஒரு சக்கரத்தைச் சுற்றிலும் மனிதன் ஓடும்போது ஏற்படும் பல நிலைகளைக் காட்டும் படங்களை வரைந்தார். இரண்டாம் சக்கரத்தில் அதே இடங்களில் சிறு சந்துகளைச் செய்து அவற்றின் வழியே முதற் சக்கரத்தின் படங்கள் தெரியுமாறு அமைத்தார். இப்போது சக்கரங்களைச் சுழற்றினால் ஒவ்வொரு படமாக நம் கண்முன் வந்து நின்று மறையும். நமது கண்ணினால் அவற்றைத் தனியே பிரித்தறிய முடிவதில்லை. ஆகையால் படங்களில் மனிதனின் அசைவுகள் தொடர்ச்சியான ஓட்டமாகத் தெரியும்.

இவரைத் தொடர்ந்து வேறு பலரும் இயக்கப்படக் கருவிகளை அமைத்தனர். நாளடைவில் போட்டோக் கலை முன்னேறிய பின் சினிமாவும் தோன்றியது. இதற்குப் பல ஆண்டுகளின் பின் 1906-ம் ஆண்டின் பிளாக்டன் என்ற ஆங்கிலேயர் சித்திரங்களைக் கொண்டு சிறு சினிமாப்படம் ஒன்றைத் தயாரித்தார். தொடக்கத்தில் இரண்டு அல்லது மூன்று நிமிடங்களே ஓடும் சிறு சித்திரப் படங்கள் பிடிக்கப்பட்டன. இதன் பின்னரே வால்ட் டிஸ்னி (Walt Disney) என்ற மேதை தோன்றித் தமது அற்புதமான சிருஷ்டிகளை உண்டாக்கினார். இவரது பாத்திரமான மிக்கி மௌஸ் (Mickey Mouse) என்ற சுண்டெலி 1928-ம் ஆண்டில் பிறந்தது. இதைத் திரையின் வாயிலாக உலகச் சிறுவர்கள் அனைவரும் அறிந்திருப்பர். இவரது முழுநேரப் படமான 'ஸ்னோ ஒயிட்டும் ஏழு குள்ளர்களும்'(Snow White and The Seven Dwarfs) என்ற சிறுவர் கதை 1938-ம் ஆண்டில் வெளிவந்தது. இதைப் படமாக்க மூன்றாண்டுகள் ஆயின. இதற்காகச் சுமார் ஐந்து லட்சம் படங்கள் வரையப்பட்டுத் திரைப்படமாக்கப்பட்டிருக்கின்றன. இதைப் பத்து மொழிகளில் வெளியிட்டிருக்கிறார்கள். இந்நாளில் இத்துறை பெரிதும் முன்னேறிச் சினிமாக் கலையின் முக்கியமான பிரிவுகளில் ஒன்றாக இயக்கப் படம் விளங்குகிறது.

கதைஇலாகா கதையை எழுத, அதில் வரும் முக்கியமான சம்பவங்களை முதலில் வரைவார்கள். பிறகு அப்படங்கள் சுவரில் வரிசையாக மாட்டப்பெறும். படத்தை உருவாக்கும் பணிக்கு முக்கியமானவர்கள் அனைவரும் கூடி அப்படங்களைப்பற்றி விவாதித்து, கதையின் போக்கை முடிவு செய்வார்கள். கதை முடிவானபின் படத்தில் பின்னணி

சங்கீதமும், வசனமும், வேறு ஒலிகளும் வெவ்வேருகப் பதிவு செய்யப்படும். இவ்வாறு பதிவு செய்யப்படும் ஒவ்வொரு ஒலியும் எவ்வளவு நேரம் நீடிக்கும் என்பதையும் திருத்தமாக அளவிட்டு வைத்திருப்பார்கள். ஒரு படத்தின் கதாநாகன் திரு. மூயலார் தமது காதலியைக் 'கண்ணே' என அழைக்கிருர் என்று வைத்துக் கொள்வோம். அதற்கு கால் விநாடி பிடிப்பதாக அளவிடப்படலாம். சினிமாவில் விநாடிக்கு 24 படங்கள் திரையில் தோன்றுகின்றன. ஆகையால் கால் விநாடியில் ஆறு படங்கள் ஓட முடியும். அதனுல் மூயலார் பேசும் இச்சொல்லிற்கு ஆறு படங்கள் தேவையாகும். இதற்கேற்ப, ஆறு படங்களில் மூயலார் வாயைத் திறந்து மூடுவதைத் தக்க அங்க அசைவுகளுடன் ஆறு படங்களில் காட்டலாம். இது போலவே படத்தில் வரும் ஒவ்வொரு ஒலியும் பகுக்கப்பட்டு ஓர் அட்டவணையில் குறிக்கப்படும். இந்த அட்டவணையைக் கொண்டே ஓவியர்கள் படங்களை வரைவார்கள்.

படத்தின் டைரக்டர் அட்டவணையைச் சரிபார்த்துக் கதைகளின் பாத்திரங்களைப் பற்றிய முழு விவரங்களையும் ஓவியக்காரரிடம் அளிப்பார். பல அசைவு நிலைகளிலுள்ள சித்திரங்களை அவர் இனி வரையவேண்டும். பாத்திரங்களின் தோற்றங்களையும், முகபாவங்களையும், உடைகளையும், பின்னணிக் காட்சிகளையும், பாத்திரங்கள் இயங்கும் வகைகளையும் அவரும், அவரது துணைவர்களும் முடிவுசெய்வார்கள். ஒரு காட்சிக்கு 100 படங்கள் தேவையாகின்றன என்ருல், முதற்படத்தையும், 13, 25, 49, 61, 75, 97-வது படங்களையும் இடையிடையே விட்டுவிட்டு அவர் வரைவார். இடையிலுள்ள படங்களை அவரது துணைவர்கள் வரைவார்கள். வேகமான இயக்கங்கள் நிறைந்த காட்சிகளில், இடையிலுள்ள சில படங்களையும் அவர் வரைவதுண்டு.

இப்படங்கள் வெண்மையான காகிதத்தில் பென்ஸிலால் வரையப்படும். ஒரு காட்சிக்கு வேண்டிய படங்கள் அனைத்தையும் வரைந்து முடித்தபின் இவற்றை ஒன்றின்மேல் ஒன்ருக அடுக்கி வைத்து விரைவாகப் புரட்டினுல் பாத்திரங்களின் இயக்கத்தின் தன்மை தெரியும். இதில் ஏதாவது குறைகள் இருந்தால் படங்களைத் தக்கவாறு திருத்திக் கொள்வார்கள். இயக்கம் திருப்திகரமாக அமைந்தபின், படங்கள் ஒவ்வொன்றும் ஒரு செலுலாயிடு தகட்டின்மேல் பிரதிசெய்யப்படும். இதுதான் மிகக்கவனமாகச் செய்யப்பட வேண்டும். இப்போது செலுலாயிடு தகட்டின்

மேலுள்ள படங்களுக்கு வர்ணங்கள் தீட்டப்பெறும். இவ்வர்ணங்களால் படத்தில் வரும் நிகழ்ச்சிகளை இன்னும் தெளிவுறச் செய்யலாம். காலை அல்லது மாலை போன்ற நேரத்தையும் பாத்திரங்களின் மகிழ்ச்சி, பொறுமை போன்ற மனோநிலைகளையும், பருவங்களையும் வர்ணங்களால் தெளிவாக எடுத்துக் காட்டலாம். வர்ணப் படங்களைக் கொண்ட செலுலாயிடு சித்திரங்கள் ஒளியைத் தடைசெய்து மற்ற பகுதிகளுக்குள் ஒளியைப் புக விடும். இந்தச் செலுலாயிடு படங்களே பின்னால் காமிராவினால் படமாக்கப்படுகின்றன.

ஒளியைப் புக விடும் செலுலாயிடுப் படங்களைவரைவதில் ஒரு நன்மை உள்ளது. உதாரணமாக திரு. முயலார் தமது காதலியுடன் உலாவப் போகும் காட்சியைப் படம் பிடிக்கவேண்டும் என்று வைத்துக் கொள்வோம். இதில், முயலாரின் நடையைச் சித்தரிக்கும் படங்கட்கு மட்டும் முதலில் செலுலாயிடு தகடுகளின்மேல் தனியே பிரதி செய்யப்படும். காதலியின் நடையைச் சித்தரிக்கும் படங்கள் இரண்டாவதுதொகுதியில் பிரதி செய்யப்படும். இவர்கள் செல்லும் பாதை, அதிலுள்ள மரங்கள், வீடுகள் போன்ற பின்னணிக் காட்சிகளை மூன்றாம் தொகுதியாகப் பிரதி செய்வார்கள். இப்போது ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள படங்களை ஒன்றின் மேல் ஒன்றாக வைத்தால் நாம் முழுக் காட்சியையும் பெறலாம். மூன்று தொகுதிகளின் படங்களும் சரியானவாறு கூட்டப்பட்டுக் காமிராவினால் படம் பிடிக்கப்படுகின்றன. படங்கள் செலுலாயிடு தகட்டில் வரையப்படுவதால் மூன்று தகடுகளிலும் உள்ள சித்திரங்களை ஒன்று சேர்த்துப் படம் பிடிக்க முடிகிறது. முயலாரும், அவர் காதலியும் போகும் பாதையைக் காட்ட அவர்களை ஒரே இடத்தில் வைத்துப் பின்னணிக் காட்சியைச் சிறிது சிறிதாக நகர்த்திப் படம் பிடிப்பதும் உண்டு. இதற்காக, பின்னணிக் காட்சியானது மிக நீண்டதொரு செலுலாயிடுப் பட்டையின்மேல் வரையப்பட்டு நடக்கும் உருவங்களின் பின்னால் வைக்கப்பட்டு நகர்த்தப்படும். ஓர் உருவம் இயங்கும் போது அதில் நிலையாக இருக்கும் உறுப்புகளை ஒரு செலுலாயிடுத் தகட்டிலும், இயங்கும் உறுப்புக்களைப் பல்வேறு நிலைகளில் காட்டும் படங்களை வேறாகவும் வரைந்து இரண்டையும்

பிறகு ஒன்று சேர்த்துப் படம் பிடிப்பதும் உண்டு.

ஒவ்வொரு படத்தையும் தனித்தனியே படம்பிடிக்கும் வேலை தொல்லைமிக்கது. ஓரிடத்தில் காமிராவை மேஜையின்மேல் பொருத்திக் கீழே சித்திரங்களை வைத்துப் படம்பிடிக்கலாம். காமிராவை மேலும் கீழும் நகர்த்திச் சாதாரணப் படப்பிடிப்பில் நிகழ்த்தப்படும் பல தோற்ற விளைவுகளைக் காட்டலாம். ஒரு காட்சியிலிருந்து வேறொன்றிற்கு மாறும் வித்தையும் காமிராவைக் கொண்டு செய்யப்படுகிறது. சுமார் பத்து நிமிடங்கள் ஓடும் சிறு படத்தைப் படம்பிடிக்கச் சுமார் ஒருமாத காலம் பிடிக்கும்.

படத்தில் கேட்கும் மூவகை ஒலிகளும் சரியானவாறு ஒன்று சேர்த்துப் படத்தின் விளிம்பில் உள்ள ஒலிப்பாதையில் பதிவு செய்யும் வேலை முடிந்தபின் படத்திலிருந்து பிரதிகள் எடுக்கிறார்கள். ஒரு படத்திற்குச் சுமார் நூறு பிரதிகள்வரை எடுக்கப்படுகின்றன.

சாதாரணப் படங்களில் இல்லாத பல நன்மைகள் கார்ட்டூன் படங்களில் உண்டு. ஓவியம் என்ற அருங்கலைக்கு இப்படங்களில் முழு வாய்ப்புக் கிடைக்கிறது. காட்டூன் படமெடுக்கும் கலைஞரின் கற்பனைத் திறனுக்கு ஓர் எல்லையே இல்லை. அவர் தமது படத்தின் வாயிலாகத் தம் கருத்துக்கள் அனைத்தையும் காட்டலாம். உதாரணமாக, கள்ளங் கபடமற்ற குழந்தையுள்ளம் படைத்த ஒருவன் சூழ்நிலையால் சூது நிறைந்த

'' ஐயா சாமி, சாப்பட்டு நாலு நாளாச்சு, புண்ணியவானுங்களே. மறக்காமெ என் வவுத்துப் பெட்டிககு ஒங்க வோட்டைப் போட்டுக் காப்பாத்தணும் சாமி. ''

கொடியோனாக மாறிவிடுகிறான் என்பதைக் கார்ட்டூன் படம் சில விநாடிகளில் மிகத் தெளிவாகக் காட்டிவிடும். மழை நீரை மாருதியாகவோ, குருவியைக் கூற்றுவனாகவோ இவன் எளிதில் மாற்றலாம். ஒரே காட்சியை வெவ்வேறு வேகங்களில் காட்டி வேறுவேறான கருத்துக்களை அறிவுறுத்தலாம்.

ரஷ்யாவில் கார்ட்டூன் படங்களைப் பிரசாரத்திற்கும், கல்வி புகட்டுவதற்கும் பயன்படுத்துகிறார்கள். கல்வி முறைக்கு இவை நல்ல துணையாகும். மனித உடலில் நிகழும் அற்புதமான விளைவுகளையும், அணு உலகில் நிகழும் அதிசய விளைவுகளையும் தெளிவாக விளக்க இப் படங்களைப் பயன்படுத்தலாம். கலை, கல்வி ஆகிய இரு துறைகளிலும் நல்ல பணியாற்றவல்ல கார்ட்டூன் படங்கள் நம் நாட்டிலும் தோன்றும் நாள் விரைவில் வருமென எதிர்பார்ப்போமாக!

விடுதலை

டி. ஜே. இன்பராஜ்

சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரம் எட்டு முறை அடித்தது. பாலன் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தான். அன்று ஞாயிற்றுக் கிழமை. அவனுக்குப் பள்ளிக்கூடம் இல்லை. வெளித் திண்ணையில் உட்கார்ந்து தெருவில் போய்க்கொண்டிருப்பவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

"கிளிக் குஞ்சு, கிளிக் குஞ்சு" என்று தெருவில் ஒரு குறவன் கத்திக்கொண்டிருந்தான். பாலன் அவனை உற்றுக் கவனித்தான். அவன் முகத்தில் தாடி வளர்ந்திருந்தது. கண்கள் குழி விழுந்திருந்தன. கந்தல் துணியை இடுப்பில் சுற்றியிருந்தான். அவன் கையில் ஒரு கிளி இருந்தது.

"அப்பா, அப்பா" என்று கூப்பிட்டுக்கொண்டே பாலன் வீட்டிற்கு ஓடினான். "என்னடா சமாச்சாரம்?" என்று கேட்டார் அப்பா. அவர் அப்பொழுதான் குளித்துவிட்டு வநதார்.

"தெருவில் ஒருவன கிளி விற்கிறான். வாங்குங்கோ அப்பா" என்று பாலன் குதித்தான். வீட்டில் வெகு நாட்களாக ஒரு கிளிக் கூண்டு இருந்தது. ஒரு கிளி வாங்கவேண்டுமென்று அப்பா முன்பு சொல்லியிருந்தார். அதைத்தான் பாலன் ஞாபகப்படுத்தினான்.

"வேண்டாண்டா, சுதந்திரமாகப் பறந்து திரியும் கிளியைக் கூண்டில் அடைத்து வைப்பது பாவம்" என்றார் அப்பா. ஆனால் பாலன் விடவில்லை. அழ ஆரம்பித்துவிட்டான். உடனே அப்பா குறவனைக் கூப்பிட்டு, எட்டணா விலை கொடுத்துக் கிளியை வாங்கினார்.

பாலன் கிளிக்கூண்டைச் சுத்தம் செய்து கிளியை அதற்குள் அடைத்தான். சிவந்த மூக்கும் பச்சை நிறச் சிறகுகளும் கொண்ட அந்தக் கிளி பார்ப்பதற்கு அழகாக இருந்தது. "இறக்கைகளுடன் இருந்தால் கிளி பறந்துவிடும். அதனால் இறக்கைகளைக் கத்தரிக்க வேண்டும்" என்று அம்மா சொன்னாள். அந்த அழகிய இறக்கைகளைக் கத்தரிப்பதைப் பாலன் விரும்பவில்லை.

அவன் கிளியுடன் கொஞ்சநேரம் கொஞ்சிக்கொண்டிருந்தான். பிறகு ஒரு வாழைப்பழத்தை உரித்துக் கூண்டிற்குள் வைத்தான். கிளி அதை ஏறிட்டுக்கூடப் பார்க்கவில்லை. தலையைத் தாழ்த்திக் கொண்டு துக்கத்தில் ஆழ்ந்திருந்தது.

"கிளி, பழம் தின்ன மாட்டேங்கிறதே!" என்று ஆச்சரியத்துடன் பாலன் அப்பாவைக் கேட்டான்.

"எப்படித் தின்னும்? அப்பா, அம்மாவைப் பிரிந்து தனியே இருக்கிறோமேயென்று அது வருத்தப்படுகிறது" என்றார் அப்பா.

"ஏன், நாம் இல்லையா? வேளை தவறாமல் அதற்குப் பழம் கொடுப்போமே!"

"எவ்வளவு ருசியான பழமாக இருந்தாலும் அப்பா, அம்மா இல்லாவிட்டால் சாப்பிட மனம் வராது."

அப்பா சொன்னது பாலனுக்கு விளங்கவில்லை.

★

அன்று மாலை பாலன் பந்து விளையாட ஒரு மைதானத்திற்குச் சென்றான். ஆறு மணிக்கு அவன் விளையாட்டு முடிந்து திரும்பி வந்தான். அதிக நேரம் ஆடியதால் அவன் களைத்துப் போயிருந்தான். சட்டையெல்லாம் ஒரே புழுதி. தள்ளாடிக் கொண்டே நடந்தவன் திடீரென்று நின்று விட்டான். அவனுடைய பார்வை ஒரு மரத்தின்மேல் நிலைத்து விட்டது.

அவன் அப்பொழுது ஒரு மாந்தோப்பிற்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான். மாமரங்களில் நன்கு பழுத்த பழங்கள் தொங்கிக்கொண்டிருந்தன. அந்தத் தோப்பு ஒரு பண்ணையாருக்குச் சொந்தம். அவர் தோப்பைச் சுற்றி உயரமான சுவர் எழுப்பிக் கதவும் வைத்திருந்தார். கதவைத் திறந்து கொண்டு தான் தோப்பிற்குச் செல்ல முடியும். கதவு எந்நேரமும் பூட்டியபடியே இருக்கும்.

ஆனால் அன்று கதவு திறந்திருந்தது. பாலன் கத



வருகில் சென்று தோப்பைக் கவனித்தான். அங்கு ஆளிருக்கும் அரவமே தெரியவில்லை. மல்கோவாப் பழங்களின் வாசனை மூக்கைத் துளைத்தது. மெதுவாகத் தோப்பிற்குள் நுழைந்துவிட்டான்.

அவன் மரத்திலேறி ஒரு பழத்தை பறித்துக் கொண்டான். அதைச் சுவைத்தவாறு கீழே இறங்கி வந்தான். கதவின் அருகில் வந்தவுடன், திடுக்கிட்டு நின்றுவிட்டான். ஆச்சரியம்! கதவு பூட்டப்பட்டிருந்தது!

பாலன் மரத்திலிருந்த சமயம் தோட்டக்காரன் அங்குவந்து கதவைப் பூட்டிச் சென்றிருக்கவேண்டும். அவன் ஒன்றும் தோன்ருமல் திகைத்தான். சிமிண்டினுல் கட்டப்பட்ட அந்த உயரமான சுவரில் ஏற முடியாது. எப்படி வீட்டிற்குச் செல்வதென்று வருத்தப்பட்டான்.

இரவு வந்துகொண்டிருந்தது. பாலன் ஏக்கத்துடன் கதவிடுக்கின் வழியாக வெளியே பார்த்துக்கொண்டிருந்தான். யாராவது அந்தப் பக்கம் சென்ருல் கூப்பிடலாமென்று அவன் நினைத்தான். ஆனல் ஒருவரும் அப்பக்கம் வரவில்லை.

நன்ருக இருட்டிவிட்டது. பாலன் வருத்தத்துடன் மரத்தடியில் அமர்ந்துகொண்டான். அவன் தனியே இருந்ததால் மிகவும் பயந்தான். அச்சமயம் ஒரு பெரிய காற்றடித்தது. மரத்திலிருந்து ஒரு பெரிய மாம்பழம் அவன் காலடியில் விழுந்தது.

அவனுக்கு அந்த மாம்பழத்தை எடுத்துத் தின்னத் தோன்றவில்லை. ஏனே அந்தச் சமயம் அவனுக்குப் பசிக்கவில்லை. அவன் வீட்டிலிருந்தால் அந்நேரம் அப்பா அம்மாவுடன் பேசிக்கொண்டு

சாப்பிடுவான். அவனுக்கு வீட்டு ஞாபகம் வந்து விட்டது. ருசியான மாம்பழத்தைச் சாப்பிடுவதைவிட அப்பா அம்மாவிடம் போவதையே அவன் விரும்பினான்.

"எவ்வளவு ருசியான பழமாக இருந்தாலும் அப்பா அம்மா இல்லாவிட்டால் சாப்பிட மனம் வராது" என்று அப்பா காலையில் சொன்னது அவன் நினைவுக்கு வந்தது. அந்த வாக்கியத்தின் கருத்தும் அவனுக்குப் புரிந்தது.

அவனுக்கு ஒரே அழுகையாக வந்தது. "அப்பா, அம்மா" என்று அவன் வெகுநேரம் அழுதுகொண்டிருந்தான். பிறகு சோர்வு அதிகமாகி அப்படியே அவன் தூங்கிவிட்டான்.

பொழுது விடிந்தது. பாலன் விழித்துக்கொண்டான். அந்தச் சமயம் தோட்டக்காரன் கதவைத் திறக்கும் சப்தம் கேட்டது. பாலன் உற்சாகத்துடன் எழுந்தான். தோட்டக்காரன் கதவைத் திறந்ததுதான் தாமதம், பாலன் சிட்டாய்ப் பறந்துவிட்டான். 'அவன் யார்? எப்படி வந்தான்?' என்பதைத் தோட்டக்காரனால் நிதானிக்க முடியவில்லை.

பாலன் வீட்டிற்குள் நுழைந்தான். அவனை இரவு முழுவதும் காணாததால் அவன் அம்மா ஒரு மூலையில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள். இரவு முழுவதும் அவனைத் தேடிக் களைத்துப் போய் வந்த அப்பா, அம்மாவுக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்தார்.

அக்காட்சியைக் கண்ட பாலனின் உள்ளம் உருகிவிட்டது. "அம்மா!" என்று கத்திக்கொண்டே அம்மாவைக் கட்டிப்பிடித்துக் கொண்டான். அப்பாவும் அம்மாவும் ஆனந்தக் கண்ணீர் உகுத்தனர்.

பாலனுக்கு உடனே கிளியின் ஞாபகம் வந்தது. அது, தன் அப்பா அம்மாவைக் காணாமல் எவ்வளவு தூரம் துடித்திருக்கும் என்று அறிந்தான். குஞ்சைக் காணாத கிளிகள் எவ்வளவு வருந்தியிருக்கும் என்பதும் அவனுக்குப் புரிந்தது.

அவன் அம்மாவின் மடியிலிருந்து எழுந்து கிளிக்கூண்டின் அருகில் சென்றான். கிளி அவனை ஏக்கத்துடன் பார்த்தது. அவனுடைய கை, கிளிக்கூண்டின் கதவைத் திறந்தது. கிளி 'பட, பட' வென்று சிறகடித்துக்கொண்டு வெளியே பறந்தது. அது மகிழ்ச்சியுடன் "கீச், கீச்" என்று கத்திய சப்தத்தைக் கேட்டு அவன் ஆனந்தம் அடைந்தான். அவனுடைய வாய் "விடுதலை, விடுதலை" என்று முணுமுணுத்தது.

பிரெஞ்சு நாவலாசிரியர்
பிளாபர்ட்

இரண்டாவது கட்டுரை : மு. அண்ணுமலே

பிளாபர்ட், மாடம் போவரி (Madame Bovary) என்னும் நாவலே முதன்முதலில் எழுதி வெளியிட்டபோது நகரெங்கணும்ஒருபரபரப்புண்டாயிற்று. கதையமைப்பைக்கண்டு அஞ்சினர். பெரிய மனிதர்களும் நன்னெறியாளர்களும் பழைமைவாதிகளும் வேண்டுமென்றே எழுதப்பெற்ற நூல் என வைதனர். பிளாபர்ட்டிடம் நல்ல கருத்துள்ள சில நண்பர்களும் பெண்களும் மனம் கசந்து கண்டித்தனர். ஆசிரியர், ஒழுக்கத்தில் நம்பிக்கை இல்லாதவர் என்றும் அவரது நாவல் பெண்மக்களுக்கு இழிவைக் கற்பிக்கிறது என்றும் கருதினர். அரசியலார் இந்நாவலுக்குத் தடைவிதித்தனர். ஆசிரியரும் வெளியிட்டவரும் சட்டத்தின் முன்னிலேக்குக் கொண்டுவரப்பட்டனர். இது காரணமாகச் சட்ட மன்றத்தில் நிகழ்ந்த வழக்கும்ஆசிரியருக்காக வழக்காடிய செனூர்டு என்பவரின் திறமையான வாதமும் பின்னர் வந்த வெளியீடுகளில் நூலின் ஒரு பகுதியாகவே இணைக்கப்பட்டன.

பிளாபர்ட் அந்த வழக்கில் வெற்றிபெருதிருந்தால் எழுத்தாளரின் இலக்கிய சுதந்திரத்திற்கு இடையூறு ஏற்பட்டிருக்கலாம். சட்டம் வெற்றிபெறுமானல் எப்போதும் தீமையையே தண்டிக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. நல்லனவற்றையும் தன் இயந்திரக்கைகளில்முறித்து அழித்துவிடக்கூடும். பொதுவாக இலக்கிய உலகில் கீழ்த்தரமான எழுத்தாளர்கள்மக்களுக்கு உடல் வெறியை ஊட்டக்கூடிய கதைகளே எழுதுகிருர்கள். மக்களில் இரண்டாந்தரப் பேர்வழிகள்—அல்லது பொதுவாகவே—கீழ்த்தரமான, ஒழுக்க ஊழல்களேக் கேட்பதற்குமக்கள் ஆவல் உடையவர்களாக இருக்கின்றனர். அந்த ஆவலேப் பயன்படுத்திப் பணம் சம்பாதிக்க எழுத்தாளர்கள் சிலர் நினேப்பது உண்மை. அதற்காகச் சட்டத்தின் வேகம் இலக்கிய உலகில் புகுந்து சீர்திருத்தவேண்டும் என்று நினேப்பது இலக்கிய உலகுக்குக் கேடு விளேவிப்பதாகும். இலக்கிய உலகம் அரசியல் அதிகாரத்தால் தாக்குண்டு போய்விடக்கூடாது. கீழ்த்தரமான இலக்கியங்களும் மட்டரகமான 'மோசடி' எழுத்தாளர்களும் விரைவில் தெரிந்து கழிக்கப்பட்டு விடுவார்கள். சட்டத்தின் துணையால் இலக்கிய உலகைத் தூய்மைப்படுத்த முடியாது; ஏன் என்ருல் மனிதப் பிராணிதானே நீதியையும் சட்டத்தையும் நிர்ணயிக்கிறது!

பிளாபர்ட்டின் வெற்றி பிரஞ்சு இலக்கியத்தின்—பிரஞ்சு எழுத்தாளர்களின் வெற்றி யாகவே கருதப்படும். பிளாபர்ட் தோற்றிருந்தால் அவர் வழித் தோன்றிய எழுத்தாளர் திலகங்க ளெல்லாம் பெண்கள் எல்லோரையுமே கற்புக்கரசிகளாக, பத்தினித் தங்கங்களாகப் படைத்துச் சட்டத்தின் கண்களுக்குத் தப்பி வாழவேண்டிய கட்டாயத்துக் குட்பட்டிருக்கலாம்.

முதன் முதலில் மக்கள் அந்நூல் ஒரு புதுமையான ஆக்கம் என்பதை உணர்ந்துகொள்ளவில்லை. அதில் வரும் கதைத் தலைவி எத்தனை கைமாறுகிருள் என்று ஆசிரியரின் துணிவைக் கடிந்துகொண்டனரே தவிர அதிலே அமைந்த இயற்கைப் போக்கையும் வாழ்க்கை ஆராய்ச்சியையும் அறிந்து போற்றவில்லை. வெறுப்பில் உண்மை மறைந்துவிட்டது.

இவ்வாறு கடிந்துரைக்கப்பட்ட இந்நாவலை இன்றைய விமரிசகர்களில் சிலர் திறமையான வாதத்தோடு போற்றிப் புகழ்கின்றனர்.

எம். டெயின் (M. Taine) என்னும் எழுத்தாளர் இந்நூல் பற்றிக் குறிப்பிடும் நிகழ்ச்சியை இங்கு வைத்துக் காணலாம்.

ஒரு தேனீர் விருந்து நடந்தது. அதில் ஒரு ஆங்கிலமாது கலந்துகொண்டிருந்தாள். அவள் ஒழுக்கத்தை மறந்தவானம்பாடி. அவளருகில் ஒரு பிரெஞ்சு இளைஞன் உட்கார்ந்திருந்தான். இருவரும் உரையாடிக்கொண்டிருந்தனர்.

“நான் அண்மையில் ஒரு நாவல் படித்தேன், நன்னெறியில் நம்பிக்கை உள்ள எவரும் அதை வரவேற்பார்கள் என்பது திண்ணம்”

“அப்படியென்ன அந்த நாவலில் இருக்கிறது? அதன் கதை என்ன?” என்று கேட்டாள் அந்த மாது.

“கடை கெட்ட பெண்ணொருத்தியின் கதைதான் அது. கைவிட்டுக் கைமாறித் திரிந்த அவளை இறையருளின் தீர்ப்பு தேடிவந்தடைகிறது; பலி வாங்குகிறது. அவள் தான் செய்த பாபத்திற்குப் பரிகாரமாகத் தன் உயிரை விடுவதைத் தவிர வேறென்றும் காண முடியவில்லை. நஞ்சுண்டு சாகிருள்.” என்று சில வரிகளில் அந்த நாவலை முடித்தான் இளைஞன்.

“அந்தப் புத்தகத்தின் பெயர்?”

“மாடம் போவரி” என்ருன் இளைஞன்.

இது புனைந்து சொல்லப்பட்ட நிகழ்ச்சியே என்ருலும் இந்நாவல் ஒரு ஒழுக்க நூலே என்ற கருத்தைக் கூறுவதற்காக டெயின் கைக்கொண்டதாகும்.

தன் அப்பாவியான கணவனுக்குத் துரோகம் செய்து அவன் உழைத்து ஈட்டிய செல்வத்தைத் தன் களிவாழ்விற்காக இறைத்து தன் குழந்தை அனதையாவதற்குத் தானே காரணமாகிச் சட்ட பூர்வமாக மணந்த கணவன் இறப்பதற்கும் தானே காரண

மாகி, ஊர்ப்பழிக்கு அஞ்சாது, உடல் சுகத்தையே பெரிது என நினைத்து திரியும் கதைத் தலைவி நஞ்சுண்டு சாகிறாள்.

முடிவில் தர்மம் வெல்லுகிறது; அதர்மம் தோற்கிறது.

இது காரணம்பற்றியே ஹென்றி ஜேம்ஸ் (Henry James) என்னும் நாவலாசிரியர் "ஒவ்வொரு புனித ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாதாகோயிலில் இந்நாவலை வைத்துப் படிக்கலாம்" என்று கூறுகிறார். ஹென்றி ஜேம்ஸ் கூறுவது போல் எழுதும்போது பிளாபர்ட் எந்த மனநிலையோடு வேண்டுமானாலும் எழுதியிருக்கலாம். ஒழுக்கச் சீர்கேடுகளைச் சித்தரிக்கும்போது அவற்றிற்குச் சிறிது அநுதாபம் காட்டியிருக்கலாம். ஆனால் அவரது திறமையினின்று முகிழ்த்த இலக்கியம் ஒழுக்கத்தின் உயர்வுக்கே அரணாக அமைந்திருக்கிறது. நினைப்பால் பிளாபர்ட் எவ்வாறாயினும் செயலால், அவர் எழுதித்தந்த நூலால் சிறந்த ஒழுக்கவாதியாகவே காணப்படுகிறார்.

ஆசிரியர் குரலில் ஒரு அநுதாப உணர்ச்சி தோன்றி கதைத் தலைவியாகிய எம்மாவின்பக்கம் சேர்கிறது என்பது என்னவோ உண்மைதான். ஆனால் அவ்வநுதாப உணர்ச்சி ஒழுக்கத்தை வெறுத்து எழுந்ததன்று. கதையுறுப்பினரின் பாபத்தை ஆசிரியர் இரக்க உணர்ச்சியோடு அணுகிப் பாபம் செய்யக் காரணமான சூழ்நிலையையும் உரமற்ற உள்ளத்தையும் ஆராய்கிறார் என்றே கொள்ளவேண்டும்.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பதடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)

Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.

பிராஞ்சு 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES, 82 MAIN ST, கொழும்பு-11.

அடிமை ஆனேன்!

நா. சி. வரதராசன்

தேன்மணக்கும் கனிகுலுங்கும் மாந்தோப் போரம்
தீவியக்கும் பொன்னொளிசேர் வதனம் ஒன்று
நான்குளித்துக் கரையேறும் நேரந் தன்னில்
நகைதெளிக்கக் கண்டிட்டேன்! மின்னல் மின்னி
ஊன்சிலிர்க்க என்னுடலுள் ஓடல் போல,
உணர்வெழுந்த துயிரெங்கும்! புதுமை வெள்ளம்!
மான்பகைக்கும் மயல்விழியாள் என்னைக் கண்டாள்!
மருள்கொழிக்கும் கண்ணிணையில் நாணம் சேர்த்தாள்.

தமிழமுதைத் திரட்டியெதிர் வைத்தாற் போலே,
தனிஇசையில் குழையுமோர் அழகைத் தேடி,
கமழ்இளமை விரட்டியது! சென்றேன் மெல்ல!
காலடிக்கீழ் சலசலக்கும் சருகின் ஓசை
குமரியவள் சிந்தனைக்குத் தடையாய் வாய்க்கக்
குளுகுளுக்கும் கானமதைக் காற்றில் விட்டே,
நிமிர்ந்துவிழிக் கோணமதில் சிறையிட் டென்னை
நினைவழித்துக் கனவுலகிற் கழைத்துப் போனாள்!

இருளெதிர்க்கும் இளநிலவின் மென்மை இன்பம்
இதயமதில் கிளுகிளுக்க, புளகித்துப் போய்,
"அருளெடுத்தே அழகுருவாய் வந்தென் நெஞ்சை
அயில்விழியின் முனையினிலே இணைத்துக் கொண்டாய்!
மருளெடுத்து நகர்ந்தினிஎன் அலைக்கின் றாய்? என்
மனமுடைத்துத் தனிவிடுத்தால் உயிர்வாழ் வேனோ?
திரள்இளமைக் கனிசுவைப்போம்! அருகே வாராய்!
தெள்ளமுதே!" என்றவளை நெருங்கப் போனேன்.

கொஞ்சுமவள் விழிகளிலே கோபம் பொங்க,
"கூறுகிறேன்! எட்டியிருந் தெதுவும் பேசு!
மிஞ்சி, எனை அணுகினையேல் உந்தன் தன்மை
மேன்மையுறும் தன்மதிப்பு எல்லாம் பாழாய்,
அஞ்சியெனக் கேவலிடும் அடிமை ஆவாய்!
அப்புறம்நீ பேசலெலாம் என்பேச் சேதான்!
நஞ்செனவே எண்ணிடெனை! நன்றே சொன்னேன்!"
நங்கைஇவை மொழிந்தாள்; பின் எங்கோ பார்த்தாள்.

"நெஞ்சகத்தைப் பறிகொடுத்து நிற்பேனா நான்?
நேர்வதினைக் காண்கின்றேன்; வாராய்" என்றே
மிஞ்சிவெறிக் களியினிலே அவளைப் பற்றி
மென்முகத்துத் துடியதரம் சுவைத்தேன்! அந்தோ!
விஞ்சியதே மோகவெறி மேலும் மேலும்!
வெள்ளமெனப் பொங்கியெழும் இன்பம் துய்த்தோம்!
வஞ்சியவள் வென்றிட்டாள்! என்னில் நானாய்
வந்துறவு பூண்டிட்டாள்: அற்றைப் போழ்தாய்

தன்னுரிமை ஏதுமில்லை! செய்கையெல்லாம்
தன்னதெனக் கொள்ளுகிறாள் அன்னாள்! பேச
என்னுதட்டைத் திறந்திட்டால் தானே வந்து
ஏதேதோ பேசிடுவாள்! கையில் பேனா
தன்னையெடுத் தேதேனும் வரைவம் என்றால்
தன்கருத்தைத் தாளினிலே கொட்டிப் போனாள்!
என்னுரிமை போச்சுதடா இந்தப் பெண்ணால்!
இசையெழிலுக் கேனோநான் அடிமை ஆனேன்!

பவுன் மோதிரம்

வீர. பழனியப்பன்

ஓலமிட்டவாறு ஓடியது ரயில் வண்டி. 'இண்டர்' வகுப்புப் பெட்டிக்குள் உட்கார்ந்து ஜன்னல் வழியாக வெளிப்புறத்தையே உற்று நோக்கிக்கொண்டிருந்தாள் ராஜம். ஊதல் காற்றின் சீறல் அவள் சிந்தனையைத் தடைப்படுத்துவதாகக் காணோம்!

வெளியே ஒரே இருள். பகலிலே 'பச்சைப் பசேல்' என்று காணப்படும் மரங்கள் கூட இருளின் பிடிப்பிலே கரிய நிறத்தோடு அவளுக்குக் காட்சி அளித்துக் கொண்டிருந்தன. அவள் ஏனோ அதையே பார்த்துக் கொண்டிருந்தாள்! அவள் 'மேலாக்கு' வெடுக்கென்று இழுக்கப்பட்டது. திரும்பிப் பார்த்தாள்.

"ராஜம்! மாமாவுக்கு நல்ல தூக்கம்!"—சிரித்துக் கொண்டே எதிர்ப்பலகையில் படுத்துக் கொண்டிருந்தவரைக் காட்டினான் கிருஷ்ணன். ராஜம் அவரைப் பார்த்தாள்.

"கொர்...கொர்..." என்று 'குறட்டை' விட்டவாறு அவர் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார்.

"ஹூம்" பெருமூச்சு உடைந்து அதன் ஒரு பகுதி வெளிக்கிளம்பியது. அவள் கண்களிலே ஒரு கலக்கம். தொண்டைக் குழியில் ஒரு 'செருமல்' உருவாகி, நெட்டுயிர்ப்பிலே கலந்து வெளியே தலை நீட்டியது,

"ராஜம்! ஏன் மனதைப் போட்டு அலைக்கழித்துக் கொள்கிறாய்! நடந்து போனதையெல்லாம் மறந்திடு. இனிமேல் அதை நினைத்துத்தான் என்ன செய்வது?"—லேசாக அவன் விரல்கள் அவள் கன்னத்தைத் தடவிக்கொடுத்தன.

"எப்படி அதை என்னாலே மறக்க முடியும்?" ஒரு விம்மல் வெடித்துக் கண்ணீர் சிதறியது.

"கண்ணைத் துடைச்சுக்கோ ராஜம்! என்னவோ வயதான காலம். என்னதான் அவர் தவறுதலா நடந்து கொண்டாலும் அவருக்கு உன் மேலே இருக்கிற ஆசை எதுவும் குறைந்து போய்விட்டதா? அப்படி ஒன்றும் இல்லையே! அப்படி அவர் உன் மேலே ஆசையில்லாதவரா இருந்தால் பொங்கலுக்கு அழைத்துக் கொண்டு போவதற்கு வருவாரா?"

"உங்களுக்கு, என்னை அப்பா ஆரம்பத்திலே எப்படி வளர்த்தாரென்று தெரியாது! எனக்கு அம்மாவைப் பற்றிய நினைப்பே வராமல் என்னை எவ்வளவு செல்லமாக வளர்த்தார் தெரியுங்களா!

அட்டைப்படக் கதை

அப்படியெல்லாம் இருந்தவர் தான் பிறகு.........''—மேலே வார்த்தைகள் வெளிவரவில்லை. கண்களை மூடிக்கொண்டு விசித்து விசித்து அழ ஆரம்பித்துவிட்டாள்.

கிருஷ்ணன் எதிர்ப்பலகையில் படுத்திருந்தவரைப் பார்த்தான். அவன் பார்வையில் பாதி பரிதாபமும், பாதி ஆத்திரமும் கலந்திருந்தன. அவர் தூங்கிக் கொண்டே இருந்தார்!

"ராஜம்...ராஜம்!''—கிருஷ்ணன் அவளது கரங்களை முகத்திலிருந்து விலக்கினான். அவள் உதடுகள் படபடத்துக் கொண்டிருந்தன. அவள் கண்களிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த கண்ணீரைத் துடைத்தான்.

"நான் எதை மறந்தாலும் மறந்திடுவேன். ஆனால் அப்பா நம்ம கல்யாணத்துக்கு வராம இருந்தார் பாருங்க, அதை மாத்திரம் என்னாலே மறக்க முடியாது!''

"ராஜம்! அது அவருடைய தப்பு இல்லே! எல்லாம் உன் தாய்மாமன் இருக்கார் பாரு, அவர் செய்த வேலே! இவர் இரண்டாம் கல்யாணம் செய்து கொண்டார் என்கிற ஆத்திரத்திலே நம்ம கல்யாணத்தைப் பற்றிய செய்தியையே இவருக்குத் தெரிவிக்காமல் இருந்துவிட்டார்...''

"என்ன, நீங்கள் சொல்வது உண்மையா?''—அவள் குரலில் ஆச்சரியம் அலைமோதியது.

"உண்மைதான் ராஜம்! எனக்குக் கூட இந்தச் சேதி நேற்று அவர் சொன்ன பிறகுதான் தெரியும்! அதனாலேதான் பொங்கலுக்கு அவர் அழைத்தவுடனே உன்னைச் சமாதானப்படுத்தி 'வா'ன்னு கூப்பிட்டேன்.''

"ராஜம், கிருஷ்ணன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் முகத்திலே சிந்தனை ரேகைகள் மின்னிட்டு மறைந்தன. சற்று நேரம் அமைதி!

ராஜம்! அவருக்கோ வயதாகிவிட்டது. இனிமேல் அவருக்கு உன்னைத் தவிர வேறு யார்? யோசனை பண்ணிப் பாரு!''

"ஹும்...அவருக்கா வேறு யாருமில்லே? அவருடைய மராட்டிய மனைவி இருக்கிறாளே! ஒரு ஐந்து வயதுக் குழந்தை இருக்கிறான்! அவருக்கு என்ன குறைச்சல்!''—அவள் வார்த்தைகளில் ஆத்திரத்தினால் ஏற்பட்ட பரிகாசம் ஒளிந்துகிடந்தது.

"யார் இருந்தால் என்ன உன்னைப்போல ஆகுமா, ராஜம்! உனக்கு ஏற்பட்டு இருக்கிற கோபத்திலே நீ இந்த மாதிரியெல்லாம் பேசுகிறாய்! இந்த மாதிரி விவகாரங்களை யெல்லாம் இனிமேலும் நீ மனதிலேயே வைத்துக்கொண்டு இருப்பது எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லே! என்னவோ நடந்தது நடந்துபோய்விட்டது. இப்போ அவரும் நம்மோடு உறவு வைத்துக்கொள்ள வந்திருக்கிறார். இந்த நேரத்திலே

போய்ப் பழைய குப்பையைக் கிளறிக்கொண்டு இருக்கலாமா? போனதெல்லாம் போகட்டும் என்று நாமும் சரிப்படுத்திக் கொண்டுதானே போகணும்! அதைவிட 'அவர் இரண்டாங் கல்யாணம் பண்ணிக்கிட்டாரே, நம்முடைய கல்யாணத்துக்கு வரவில்லையே' என்று பேசுவது. சே...சே...சே!"-அங்கலாய்த்துக் கொண்டு தலையை ஆட்டினான்.

இதைக் கண்ட ராஜத்திற்குச் சிரிப்பு வந்துவிட்டது.

"தேவலையே, மாமனாருக்காக ரொம்ப நல்லா வக்காலத்து வாங்கிப் பேசுறீங்களே!"

அவளுடைய மனம் மாறி வருகிறது என்று கிருஷ்ணன் கண்டுகொண்டான்.

"வேறு என்ன செய்வது? எல்லாருமே அவருக்கு விரோதமாகப் போய்விட்டால், அவருடைய கதிதான் என்ன ஆகிறது! அதனாலேதான் நான் அவர் கட்சியை ஆதரிக்க வேண்டியிருக்கிறது!"—ரொம்பவும் கரிசனத்தோடு சொல்பவன் போல முகத்தைப் பாவனை செய்து கொண்டு அவளிடம் 'வலிப்பு'ச் செய்து காட்டினான். அவனுடைய நடிப்பு, அவளுடைய சிரிப்பை மேலும் அதிகரிக்கும்படி செய்தது.

"ஹும்...ஹும். நீங்க மாமா கட்சியையே எடுத்துப் பேசுங்க! அப்பத்தான் பொங்கலுக்கு உங்களை நல்லாக் வனிச்சுக்குவாங்க"—அவள் கொஞ்சம் பரிகாசமாகச் சொன்னாள். அவளுக்கு முன்பு இருந்த கோபம், வருத்தம், அழுகை எல்லாம் மாறிவிட்டன. கிருஷ்ணன் மனதுக்குள்ளேயே சிரித்துக்கொண்டான். அவனுக்குத்தான் வெற்றி கிடைத்து விட்டதே! மேற்கொண்டு அவன் எதுவும் பேசவில்லை.

சற்றுநேரம் அமைதி. ஓடிக்கொண்டிருந்த ரயில் நின்றது. அந்த ஸ்டேஷன் விழுப்புரம்.

படுத்துக் கொண்டிருந்தவர் வண்டி நின்றதினால் ஏற்பட்ட உலுக்கலில் புரண்டு படுத்தார். ஆனால் அவர் விழித்துக் கொள்ளவில்லை. தூங்கிக் கொண்டே இருந்தார்.

இப்பொழுது ஊதல்காற்று கொஞ்சம் குறைந்து இருந்தது. வானத்தின் கருந்திரைக்குச் சந்திரன் தன் வெண்கதிர் ஒளி பூசிக் கொஞ்சம் தெளிவை ஏற்படுத்தி வைத்துக் கொண்டிருந்தான்.

வண்டி அங்கிருந்து புறப்பட்டது.

"ராஜம்..." — அமைதியைக் கிழித்துக் கொண்டு கிருஷ்ணனின் வாயினின்றும் சொற்கள் புறப்பட்டன.

"உம்..."— வெளிப்புறத்தில் பதிந்திருந்த கண்களைக் கிருஷ்ணன்பக்கம் திருப்பினாள்.

"ராஜம், நாம் அங்கே போனதும், நீ உங்க சித்தி கிட்டே பழைய நினைப்பை யெல்லாம் வைத்துக்கொண்டு முகத்தைத் தூக்கிக்கிட்டுப் பேசாம இருந்திடாதே! கொஞ்சம் தாராளமாகவே பழகு! பாவம், அந்தப் பெண் என்ன செய்யும்?"

"என்னமோ நடந்தது நடந்து விட்டது. இனிமே யார் மேலே தான் வருத்தப்பட்டு என்ன செய்கிறது? உம்......எல்லாம் அம்மா உயிரோடு இருந்தால் இதுபோல எல்லாம் நடக்குமா? எல்லாம் என்னுடைய அதிர்ஷ்டம்!"—ஒரு நீண்ட பெருமூச்சு அவள் பேச்சுக்குப் பின்னணி இசைத்தது.

கிருஷ்ணனுக்கு ஒரு பெரிய பாரம் இறங்கியதுபோல இருந்தது. அவன் ராஜத்தை மணந்து கொண்டபிறகு மூன்று பொங்கல்கள் வந்து போய்விட்டன. ஆனால் அவன் அந்த மூன்று பொங்கல்களில் ஒரு பொங்கலை யாவது மாமனார் வீட்டில் கொண்டாடியவனல்ல! முதல் தடவையாக இப்பொழுது பொங்கலைக் கொண்டாடுவதற்கு அவன் எதிர்பாராத விதமாக மாமனார் வீட்டுக்குப் போகவேண்டிய அவசியம் அவனுக்கு ஏற்பட்டுவிட்டது, இந்தப் பொங்கலை ஆனந்தமாகக் கொண்டாட வேண்டும் என்பதுதான் அவனுடைய ஆசை. ஆனால் அந்த ஆசை நிறைவேறுவதில்தான் அவனுக்கு எவ்வளவு எதிர்ப்புகள்!

"ராஜம்...உனக்குத் தூக்கம் வரவில்லை?" சம்பந்தா சம்பந்தமில்லாமல் ஒரு கேள்வி கேட்டான்.

"ஏன், உங்களுக்குத் தூக்கம் வருகிறதா?" அவளும் ஒரு எதிர்க்கேள்வி போட்டாள்.

"எனக்குத் தூக்கம் வரவில்லை! நீயும் எதற்காகக் கண் விழித்துக்கொண்டு இருக்கிறாய்? சற்றுநேரம் படுத்துத் தூங்கேன்!"

அவள் உடம்பை முறித்துக் கொண்டாள். அவளுக்குத் தூக்கம் கண்களைச் சுற்றியது.

"சரி...நான் சற்று படுத்துத் தூங்குகிறேன்"—என்று அவள் படுத்தாள்.

அவன் ஜன்னல் வழியாக வெளிப்புறத்தைப் பார்த்துக் கொண்டு இருந்தான். அவன் முகத்தில் ஒரு பெருமித உணர்ச்சி பரவியிருந்தது.

'ஜிகு...ஜிகு' என்று ஓடிக் கொண்டு வந்த ரயில் ஒரு சிறிய ஸ்டேஷனைத் தாண்டிக்கொண்டு சென்றது. ரயில்வண்டியின் ஓட்டத்தைத் தடைப்படுத்த முடியாமல் அந்தச் சிறிய ஸ்டேஷன் ஒளியிழந்து வாடிப்போய்க் கிடந்தது!

'சாதாரணமாக எல்லா ரயில் வண்டிகளையும் அந்தச் சிறிய ஸ்டேஷன் தடைப்படுத்தி நிற்கும்படி செய்துவிடும். ஆனால் இந்த வண்டியோ அந்த ஸ்டேஷனைக் கொஞ்சம்கூட மதிக்காமல்செல்கிறதே!' என்று ஒரு எண்ணம் கிருஷ்ணனின் உள்ளத்தில் குமிழியிட்டது. அவன் திரும்பி ராஜத்தைப் பார்த்தான். அவள் 'ஒருக்கணத்தபடி' ஒரு கையைத் தலைக்கு வைத்துக் கொண்டு படுத்திருந்தாள்.

மாமனார் வீட்டில் கொண்டாடப்போகும் மகிழ்ச்சிப் பொங்கலைத் தடைசெய்யஇவ

னுடைய மனக்கிலேசம் மட்டும் தான் இருந்தது. அதையும் இப்பொழுது தாண்டியாய்விட்டது என்று எண்ணி எக்களித்தது அவன் மனம். அவன் முகத்திலே புன்னகை அரும்பியது. அவனுக்கு வெற்றிப் போதை தலைக்கேறியது. அவனுடைய கண்கள் லேசாகச் செருகிக்கொண்டன. ரயில்வண்டி அதனுடைய போக்கில் ஓடிக்கொண்டே இருந்தது.

★

பனிமூட்டத்துக்குள்ளிருந்தபடி ஆதவன் ஒளிக் கதிர்களை அள்ளித் தெளித்துக்கொண்டிருந்தான். எதிர்ப்பலகையில் படுத்திருந்தவர் லேசாகக் கண்களைத் திறந்து பார்த்தார். ராஜம் நன்ருகத் தூங்கிக்கொண்டிருந்தாள். கிருஷ்ணனும் ஜன்னலில் தலையை வைத்தபடியே தூங்கிக்கொண்டிருந்தான்.

அவர் எழுந்து சென்று, "மாப்பிள்ளை... மாப்பிள்ளை" என்று கிருஷ்ணனின் தோள்பட்டையில் தட்டினுர்.

"ஏன்?" என்று கேட்டுக்கொண்டே அவன் திடுக்கிட்டு விழித்தான்.

"நல்லதூக்கம்போலஇருக்கு!" சிரித்தபடியே அந்த மனிதர் கேட்டார்.

"இல்லே! சற்று முந்தித்தான் கண்ணை மூடினேன்..." சோம்பல் 'கொட்டாவியின்' உருவத்திலே அவன் வாயினின்றும் வெளியே வந்தது. அவன் உடலெல்லாம் தூக்கத்தின் 'நசநசப்பு' பின்னிப் பிணைந்துகிடந்தது. அவன் கண்களைத் துடைத்துக்கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான்.

அந்த மனிதர் வெளிப்புறத்தில் கண்ணை ஓட்டினுர். 'மின்சார ரயில்வண்டி' ஒன்று, அவர் வந்துகொண்டிருக்கும் வண்டியோடு பந்தயம் போட்டுக்கொண்டு ஓடிவந்துகொண்டிருந்தது.

"மாப்பிள்ளை... ராஜத்தை எழுப்புங்க" உரிமையோடு ஒரு உத்தரவு அவர் வாயினின்றும் கிளம்பியது.

கிருஷ்ணன் தூங்கிக்கொண்டிருந்த ராஜத்தை எழுப்பினுன். அவளும் எழுந்து உட்கார்ந்துவிட்டாள்.

"ராஜம்! ஊர் வந்துவிட்டது. பெட்டியெல்லாம் சரியா இருக்கான்னுபார்த்துஎடுத்துத் தயாரா வைச்சுக்கோ! அப்புறம் இறங்கப்போற அவசரத்திலே எதையாவது மறந்துவிட்டு வந்துவிடாதே" வயது அவருக்கு ஏற்படுத்திய அனுபவத்திஞல் 'எச்சரிக்கை' செய்தார்.

"சரி அப்பா!" என்று ராஜம் சாமான்களை எல்லாம் சரிபார்ப்பதில் முனைந்தாள்.

'கடபுட...கட...'என்ற ஓலத்துடன் வண்டி எழும்பூர் ஸ்டேஷனுக்குள் நுழைந்தது.

அவர்கள் மூவரும் வண்டியிலிருந்து இறங்கி வெளியே வந்தனர். அவர்கள் மூன்றுபேர் முகத்திலும் ஒரு மகிழ்ச்சி படர்ந்திருந்தது. ஆனுல் அவர்

கள் மனம்மட்டும் ஏனோ பட படத்துக்கொண்டு இருந்தது.

அவர்களுக்காக வெளியில் ஒரு 'கார்' காத்துக்கொண்டிருந் தது. மூவரும் அதில் ஏறிக் கொண்டனர். 'புர்ர்ர்ர்...' என்ற ஒரு சப்தம். கார் கிளம்பிவிட் டது.

பழைய மாம்பலத்தில் இருந்த ஒரு சிறிய பங்களாவுக்கு எதிரில் அந்தக் கார் வந்துநின்றது. இந் தப் பங்களாவின் வாசல் கத வைப் பிடித்துக்கொண்டு ஒரு ஐந்துவயதுச் சிறுவன் அந்தக் காரையே பார்த்துக்கொண் டிருந்தான். வண்டிக்குள்ளிருந்து ராஜம், கிருஷ்ணன், அந்த வய தான மனிதர் ஆகிய மூவரும் இறங்கினர்.

"இப்போதானப்பா வர்றீங் களா?" என்று கேட்டுக் கொண்டே அந்தச் சிறுவன் பெரியவரிடம் ஓடினான்.

அவர் அவன் கன்னத்தில் லேசாகத்தட்டிவிட்டு, "ராஜம்... பார்த்தியா உன் தம்பியை!" என்று சொன்னார்.

ராஜமும் கிருஷ்ணனும் அந் தச் சிறுவனைப் பார்த்தனர். அந்தச் சிறுவனும் தன் நீல மணிக் கண்களால் அவர்கள் இருவரையும் பார்த்தான். அவன் பார்வையிலே ஏனோ ஒரு அதி சயம் ஒளிந்துகொண்டிருந்தது.

"தம்பி இங்கே வா..." ராஜம் தன் இரு கைகளையும் நீட்டி அவனை அழைத்தாள். ஆனால் அவனோ அப்பாவிற்குப் பின்னால் நின்றுகொண்டு மிரட்சியடைந் தவன்போலத் 'திருதிரு'வென்று விழித்தான்.

"அக்காடா இது! எதுக்கு இப்படிப் பயப்படுறே கண்ணு?" என்று அந்தச் சிறுவனை அவர் 'தாஜா' செய்தார்.

கண்ணன் மெதுவாக ராஜத் திடம் சென்றான். ஆனால் அவ னுக்கு ராஜம் ஏனோ ஒரு புதுமையாக இருந்தாள்! அவள் அவனைத் தூக்கி நெஞ்சோடு அணைத்துக்கொண்டாள். அந்த அணைப்பு அவனுக்கு முதலில் இருந்த 'மிரட்சியை' விரட்டி விட்டது.

"எனப்பா, இது அக்கா! அப்போ அது யாரு?" என்று தன் சிறுவிரல்களால் கிருஷ்ண னைக் காட்டினான்.

"அது... அத்தான்..." என்று ராஜம் செல்லமாகச் சொன்னாள்.

"அத்தான்..." கண்ணன் தானாகவே சொல்லிப் பார்த்துக் கொண்டான்.

இதைப் பார்த்ததும் கிருஷ்ண னுக்குச் சிரிப்பு வந்தது. கண்ண னின் மழலைமொழி அவனுக்கும் ஒரு மயக்கத்தை ஏற்படுத்தி விட்டது.

"ராஜம்... கண்ணனை இப் படிக் கொடேன்" என்று அவ ளிடம் கேட்டான்.

"கண்ணு, அத்தான் கிட்டே போ..." என்று அவனைக் கீழே இறக்கிவிட்டாள். அவ்வளவு தான்! கண்ணன் 'விடுவிடு' வென்று வீட்டை நோக்கி ஓட் டம் பிடித்தான். கிருஷ்ணனுக்கு ஒரே ஏமாற்றம்!

"சரி, வாங்க உள்ளே போவோம்..." கிருஷ்ணனையும் ராஜத்தையும் அவர் அழைத்தார். எல்லோரும் நடந்தனர். வீட்டின் முகப்பிலே, 'புரொபஸர் புண்ணிய கோடி M. A.' என்று வரையப் பட்டிருந்திருந்த பித்தளைத்தகடு அவர்களை வரவேற்றது.

"அம்மா... அம்மா ... அக்கா வும் அத்தானும் வந்திருக்காங்க அம்மா!" என்று 'இரைக்க இரைக்க' கண்ணன் கூறிக் கொண்டிருந்தது அவர்களின் காதுகளில் விழுந்தது.

கண்ணன் ஏன் ஓடினான் என்பதற்குக் காரணம் அப்பொழுது தான் கிருஷ்ணனுக்குப் புரிந்தது.

"தாரா... தாரா..." அவர் ஒரு குரல் கொடுத்தார்.

உள்ளேயிருந்து முதலில் கண்ணன் வந்தான். பிறகு...

ராஜத்தின் கண்களில் ஏதோ ஒரு ஏக்கம். கிருஷ்ணன் ஆவலோடு பார்த்தான்.

"வாங்க..." ஒரு குரல் வரவேற்றது. நான்கு விழிகள் அந்தக் குரலுக்குச் சொந்தக்காரியைப் பார்த்தன.

ராஜத்தின் இரு விழிகள் கலங்கின. ஆனால் கிருஷ்ணனின் விழிகளிலோ திகைப்பு! அவன் முகம் கருத்தது. கண்களில் மிரட்சியினால் ஏற்பட்ட ஒரு சுழிப்பு! அவன் தன்னுடைய முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டான். அவனுடைய 'ஒட்டைச்சிவிங்கி' வேலையைத் தாராவைத் தவிர வேறு யாரும் கவனிக்கவில்லை.

அவள் உதட்டை ஒரு 'கடி' கடித்துக்கொண்டாள். அந்த ஒரு 'கடி' அவள் உள்ள உணர்ச்சிகளை முகத்தில் தோன்றாதபடி அணைபோட்டு தடுத்துவிட்டது.

"வாம்மா..." என்று அன்பு ததும்பக்கூறி ராஜத்தின் அருகில் சென்றாள். ராஜம் தன் தந்தையையும், அவளையும் மாறி மாறிப் பார்த்தாள்.

தாராவுக்கு ரொம்ப அதிகமாக இருந்தாலும் இருபத்துமூன்று அல்லது இருபத்துநான்கு வயது தான் இருக்கலாம்! ஆனால் அவளுடைய அப்பாவுக்கோ...? அவளைக்காட்டிலும் ஒன்றிரண்டு வயது குறைவாயுள்ள ஒரு மகள் இருக்கிறாள்! 'இவர்கள் இருவர்களும் கணவன் மனைவி' என்ற எண்ணம் அவள் உள்ளத்திலே வேல் போலப் பாய்ந்தது.

"சித்தி" ராஜத்தின் குரல் தழதழத்தது. அவளுக்குத்தாராவைப் பார்த்தும், அவளுடைய பழைய கோபமெல்லாம் இருந்த இடம் தெரியாமல் பறந்தோடி விட்டது. அவளுக்குத் தாராவைப் பற்றி எண்ணும்போது பரிதாபம்தான் தோன்றியது.

"வாம்மா...... உள்ளே போவோம்..." தாரா மிகவும் கனிவாக அவளை அழைத்தாள்.

ராஜம் ஒரு ஆத்திரமான பார்வையை, புண்ணியகோடியிடம் வீசிவிட்டு அவளைப் பின் தொடர்ந்தாள். அவருடைய செய்கை முதலில் 'தன் தாய்க்குத் துரோகம் செய்தது' போன்றது என்று மட்டும் எண்ணி ஆத்திரமடைந்திருந்தாள். ஆனால்

இப்போதோ அவருடைய செய்கை பெண் குலத்துக்கே பெரிய அநீதியை இழைத்து விட்டது என்பதை உணர்ந் தாள்.

"மாப்பிள்ளை... ரயிலிலே வந் தது ஒரே அலுப்பாக இருக்கும்! முதலிலே போய்க் குளியுங்கோ. அப்புறம் சாப்பிடலாம்" என்று கிருஷ்ணனிடம் சொன்னார்.

"இம்...இம்..." என்று ஒரு அசட்டுச் சிரிப்போடு அவன் தலையை ஆட்டினான். அவனுக் குத் தாராவைக் கண்டதும் ஏற் பட்ட அதிர்ச்சி இன்னமும் அடங்கவில்லை.

"கண்ணா ... அத்தானைக் குளிக்கிற அறைக்கு அழைத்துக் கொண்டு போ!" என்று அவர் சிறுவனிடம் கூறினார்.

"அத்தான்... வாங்க அத் தான்..." என்று கண்ணன் அவனை அழைத்தான். கண்ணா னுக்கு இந்தப் புது அத்தானோடு பேசுவதில் ஒரே கொண்டாட் டம். ஆனால் கிருஷ்ணனுக்கோ...!

"தாரா... ராதா..." ஒரு மாற்றம். அதனால் ஏற்பட்ட திகைப்பு. அவனுடைய மனம் ஏனோ புழுங்கியது! இயந்திரம் போல அவன் கண்ணனைப் பின் தொடர்ந்து சென்றான்.

★

காலைப் பலகாரங்களைச் சாப் பிட்டுவிட்டுக் கிருஷ்ணன் படுப் பதற்காகச் சென்றான். அவனுக்கு ரயிலில் வந்த களைப்பு, இரவு கண்விழித்தத னால் ஏற்பட்ட சோர்வு எல்லாம் இருந்தும் தூக்கம் மட்டும் வர மாட்டேன் என்று பிடிவாதம் பிடித்துக் கொண்டிருந்தது! புரண்டு புரண்டு பார்த்தான். ஆனால் அவன் முயற்சி ஒன்றும் பலிக்கவில்லை. மனத்திற்குள் ஏதோ ஒரு குடைச்சல்! கண் களை இறுக மூடிக் கொண்டான். கண்கள் எரிச்சலெடுத்தன.

'ராதா...ராதா...' அவனு டைய மனம் திரும்பத் திரும்ப 'ஜபம்' செய்தது.

அவன் உள்ளம் பொருமியது. அவனையறியாமலேயே ஒரு பெரு மூச்சு வெளிக்கிளம்பியது.

அவனுடைய கண்கள், இடது கைச் சுண்டுவிரலில் கிடந்த வைர மோதிரத்தில் பாய்ந்தன. அதில்........

ராதா சிரித்துக் கொண்டு இருந்தாள். அவள் விரலிலே அந்த வைர மோதிரம் ஒளி வீசிக்கொண்டு இருந்தது. அவள் முகத்திலே ஒரு பூரிப்பு.

"இந்த மோதிரம் நல்லா யிருக்கிறதே, இதை என்ன விலைக்கு வாங்கினாய் கிருஷ்ணா!" அவள் ஆசைத் துடிப்போடு கேட்டாள்.

"என்ன விலைக்கு வாங்கினால் தான் என்ன ராதா? உன்கிட்டே கொடுத்துப் போட்டுக் கொள் என்றால் இதையெல்லாம் பற்றி நீ என் அனாவசியமாகக் கேள்வி கேட்கிறாய்!" என்று அவன் பொய்க் கோபத்தோடு பேசி னான்.

"இது எனக்கே தானா!"— அவளுக்கு அவனுடைய



"நான் எப்போதும் நடுநிலைமை வகிப்பவன். அதனுலே என் வோட்டை இரண்டு பெட்டிகளுக்கும் நடுவிலே போட்டுவிட்டேன்."

வார்த்தைகளில் ஆச்சரியம் ஏற்பட்டது.

"ஹூம்... ஹூம்... ஹூம் ராதா, இது உனக்கேதான். இப்போ உன்னுடைய சந்தேகம் தீர்ந்து போச்சா?"

அவள் ஒன்றும் பேசாமல் அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் உள்ளத்தில் ஊற்றுப் போலக் கிளம்பி வந்த உவகை வெள்ளம் அவளை ஊமையாக அடித்து விட்டது!

"ராதா...எப்படி என் காதல் பரிசு?" பெருமை கலந்த குரலில் அவன் கேட்டான்.

அவள் சற்று நேரம் அந்த வைர மோதிரத்திலேயே மனதைப் பறிகொடுத்தவாறு நின்றுகொண்டிருந்தாள். ஆனல் அவனே அவளுடைய செய்கையினல் பொறுமையிழந்து விட்டான்.

"என்ன ராதா நான் கேட்கிறேன்? நீபாட்டுக்குப் பேசாமல் இருக்கிருயே?"

"இல்லே இந்த மோதிரத்தைப் பார்த்ததும் ஒரு கதை நினைப்பு வந்தது. அது தான் சற்று யோசனை செய்து கொண்டிருந்தேன்"– என்று குறும்பு கலந்த குரலில் அவள் கூறினுள்.

"அது என்ன கதை, ராதா?" அவளுடைய குறும்பைப் புரிந்து கொள்ளாமலேயே எதார்த்தமாகக் கேட்டான்.

"உம்... முன்னே ஒரு காலத்திலே சகுந்தலே என்று ஒரு பெண் இருந்தாளாம்! அவளைத் துஷ்யந்தன் என்ற ஒரு ராஜா காதலித்தாராம்! அந்தத் துஷ்யந்தன் கூடச் சகுந்தலேக்குக் காதல் பரிசாக ஒரு மோதிரத்தைக் கொடுத்தாராம். ஆனல் அந்தச் சகுந்தலே துஷ்யந்தன் காதல் எனன ஆச்சு தெரியுமா?"

"வேண்டாம்...வேண்டாம்... மீதிக் கதை எனக்குத் தெரியும்! நீ ஒன்றும் சொல்லவேண்டாம்! ஆனல் ஒன்று மட்டும் சொல்வேன் ராதா, நான் துஷ்யந்தன் அல்ல, கிருஷ்ணன்! துஷ்யந்தனுக்கு வந்தது போன்ற 'ஞாபக மறதி' எனக்கு வராது! இந்தக் கிருஷ்ணனிடமிருந்து ராதையைப் பிரிப்பதற்கு எந்தச் சக்தியாலும் முடியாது. ஞாபகம் வைத்துக் கொள்!"

அவன் அவளைத் தன்னருகில் இழுத்தான். துவண்ட அவள் அவன் தோளில் சாய்ந்தாள்.

"இந்த வார்த்தைகள் எனக்கு ஞாபகம் இருக்கும்! ஆனல்

நீங்க மறந்துவிடாதீங்க!" என்று சொல்லிக் 'களுக்'கென்று சிரித்தாள். அவளுடைய 'கிண்டல்' அவனுக்கும் சிரிப்பை மூட்டியது. அவனுடைய கைகள் மோதிரம் மாட்டியிருந்த அவளுடைய கரத்தை எடுத்துச் சற்று அழகு பார்த்தன.

"ராதா... வைரத்திலிருந்து ஒளியையும், உறுதியையும் எப்போதும் பிரிக்க முடியாது தெரியுமா?"

"உம்..." புன்முறுவல் பூத்தபடி அவன் முகத்தைப் பார்த்தாள்.

"என்னிடத்திலிருந்து உன்னையும், உன் மேல்கொண்டிருக்கும் காதல் உறுதியையும், யாராலுமே பிரிக்க முடியாது!"— அவன் முகத்திலே 'உறுதி' மின்னியது. அவள் முகமும் பூரித்தது...

விரலில் மாட்டியிருந்த வைர மோதிரத்தில் ஏனோ ஒளி கொஞ்சம் குறைவது போன்று இருந்தது. கிருஷ்ணன் தன் கண்களைக் கசக்கிக்கொண்டான். மறுபடியும் அம்மோதிரத்தைப் பார்த்தான். அது முன்னைப் போலவே பளபளத்துக் கொண்டிருந்தது. ஆனால் அவனோ?

அவனிடம் ராதா இல்லை! அவள்மேல் அவன் கொண்டிருந்த காதலின் உறுதி என்ன ஆயிற்று?

அவன் தலையைக் குனிந்து கொண்டான். அவனுக்கு அந்த மோதிரத்தைப் பார்க்கும் போதே வெட்கம் பிடுங்கித் தின்றது.



"இந்தத் தேர்தலுக்கு நிற்கும் அபேட்சகர்களில் எவரும் நேர்மையானவர் இல்லை. அதனால் நானே ஒரு அபேட்சகராக நிற்கிறேன். வாக்காளர்களும் நேர்மையற்றவர்கள். எனவே என் ஒரு வோட்டு மட்டுமே எனக்குக் கிடைத்தது.

அவன் நெற்றியை அழுத்திக் கொண்டான். சும்மா நெற்றியை அழுத்திக் கொள்வதனால் மட்டும், மனதில் கொந்தளித்து எழுந்துவரும் எண்ணங்களை அடக்கிவிட முடியுமா?

"என்னிடத்திலிருந்து உன்னையும், உன்மேல் நான் கொண்டிருக்கும் காதல் உறுதியையும் எப்போதும், யாராலுமே பிரிக்க முடியாது!" லேசாக அவனுடைய உதடுகள் முணுமுணுத்துக் கொண்டன.

"ராதா" உள்ளத்தின் அடிவாரத்திலிருந்து கிளம்பிய வார்த்தை தொண்டையிலிருந்து வெளியே வரவில்லை.

எண்ணப் பாம்பு நினைவை நோக்கிச் சீறியது. நினைவு பின்னோக்கிச் சென்றது.

நினைவு தன் நிலைக்கு வந்தது.

"ராதா" லேசாக சொல்லிப் பார்த்துக் கொண்டான். அவ் வார்த்தை அவன் உள்ளத்தை வாள்போட்டு அறுப்பது போல அறுத்தது.

'அன்று என்னால் கைவிடப் பட்ட ராதா இன்று தாரா என்ற பெயரில் என் மாமாவுக்கு மனைவி யாக இருக்கிறாள்! ஹூம் எவ் வளவு ஆச்சரியமான மாறுதல்! அவள் திருச்சியிலிருந்து செல் லும்போது 'கர்ப்பிணி' என்று சொன்னார்களே பிறகு அவள் எப்படி இவருக்கு மனைவியாக முடிந்தது?'

ஆச்சரியம், சந்தேகம் ஆகிய வைகள் அவன் உள்ளத்தைத் துளைத்தன. அவனுக்கு எல் லாமே புதிராக இருந்தது. புரண்டு, புரண்டு படுத்துப் பார்த் தான். நெஞ்சிலே பாரம் இருக் கும் போது நித்திரை வந்து விடுமா?

"அத்தான்..." என்றகுரல் கேட்டு எழுந்து உட்கார்ந்தான். கண்ணன் மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்.

"என்ன கண்ணு?" என்று கேட்டவாறே அவனை உற்று நோக்கினான்.

"நீங்க இன்னும் தூங்கலையா?"

"இல்லை" என்று சொல்லிக் கொண்டே அவனையே வெறிக்கப் பார்த்தான். அவன் மூளையில் ஒரு சுழற்சி. 'ஒரு வேளை...'–ஒரு சந்தேகம். ஆனால் அவனால் அதை முடிவுகட்ட முடியவில்லை!

"கண்ணு! ராஜம் உள்ளே என்ன செய்து கொண்டு இருக்கு?"

"அக்கா, அம்மாவோட பேசிக்கிட்டு இருக்கு! ஏன் கூப் பிட்டுக்கிட்டு வரட்டுமா?"

அவன் ஏதோ யோசனையில் ஆழ்ந்தான். கண்ணன் அங் கிருந்து போய் விட்டான்.

"என்னைக் கூப்பிட்டிங்களா?" கிருஷ்ணன் திடுக்கிட்டுப் பார்த் தான். ராஜம் நின்றுகொண்டி ருந்தாள்.

"இல்லையே..."–ஒரு இழுப்பு. கண்ணன் கடைசியில் கேட்டது நினைவுக்கு வந்தது.

"அங்கே என்ன செய்து கொண்டு இருக்கே! இங்கே எனக்குப் பொழுதே

அரிய வெளியீடுகள்

கண்ணீரும் செந்நீரும்
வளர்த்த கழகம்
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.
0–12–0

ராஜாடி ராஜா!
இரா. செழியன் எம்.ஏ. 0–12–0

பொது அறிவு–1.
இரா. செழியன் எம். ஏ. 0–8–0

விற்பனைக் கழிவு 25 சதவிகிதம் ரூ. 5-க்கு மேல் வாங்குவோர்க்கே விற்பனைக் கழிவும் கொடுக்கப்படும்; அஞ்சல் செலவும் ஏற்கப்படும். வி. பி. பி.யில் அனுப்ப வி. பி. செலவு தனியே செலுத்தவேண்டும்.

விவரங்கட்கு:-

மன்றம் பதிப்பகம்

12, வைத்தியநாத முதலி தெரு,
சேத்துப்பட்டு, சென்னை 10

போகல்லே!"— அலுத்துக் கொண்டு கூறினன்.

"இதுக்குத்தான் கண்ணனை விட்டு அவசரமாக் கூப்பிட் டீங்களா? நான் சித்தியோட இவ்வளவு நாழியாய்ப் பேசிக் கொண்டு இருந்தேன்."

"அதுக்குள்ளே நீங்க ரெண்டு பேரும் ராசியாப் போய்ட்டீங் களா? ரயிலிலே வர்ரப்போ என்னமோ குதித்தியே!" அவனு டைய 'குத்தல் பேச்சு' அவள மனதிலே 'சுருக்' கென்று தைத்தது.

"என்ன குதித்தாங்களாம்! அப்போ என்னவோ மனதுக்கு ஆத்திரமா இருந்தது. ஆனல் உண்மையிலே சொல்றேன். சித்தியைப் பார்த்ததும் எனக்கு மனசே மாறிப் போயிடுத்து. சற்றுநேரம் தானே பழகினேன். எவ்வளவு என்மேலே அன்பு தெரியுங்களா! ஹூம் என்னமோ ஆரம்பத்திலே சொன்னுங்களே அப்பா யாரையோ மராட்டியப் பெண் ணைக் கலியாணம் பண்ணிக் கொண்டாராம்னு! சித்தி பிறந்தது வளர்ந்தது எல் லாம் திருச்சிதானும். அவங் களுக்கு மராட்டிய நாடு எப்படி யிருக்குமென்று தெரியாதாம்."

அவள் சொல்வதையெல்லாம் அவன் மௌனமாகவே கேட்டுக் கொண்டு வந்தான். அவன் மனதில் ஏதோ ஒரு ஆர்வம். "திருச்சியிலே இருந்தவங்க சென்னையிலே இருந்த உங்கப் பாவை எப்படிக் கல்யாணம் செய்து கொண்டார்களாம்?" என்ருன்.

"அதை நான் ஒன்றும் அவங்க கிட்டே கேட்கவில்லை. சித்தியும் அவங்களுடைய அம்மாவும் திருச்சியிலே இருக்கும்போதே ஏழ்மை நிலையிலே இருந்தாங் கன்னு சித்தியே சொன்னுங்க. ஒரு வேளை பிழைப்பதற்காகச் சென்னைக்கு வந்து இருக்கலாம்! வந்த இடத்திலே..."

"...ச்சு அப்படியுமிருக்கலாம்" அவன் ஒரு முத்தாய்ப்பு வைத் தான். அவள் திருச்சியிலிருந்து சென்னைக்குச் சென்றதன் உண் மைக் காரணம் அவனுக்குத் தானே தெரியும்!

"என்ன இருந்தாலும் அப்பா இதுபோல இளம் வயதிலே இருக்கிற பெண்ணை இரண்டாந் தாரமாக் கல்யாணம் செய்து கொண்டு இருக்கக் கூடாது!"

"ஏன் அதை மறுபடியும் கிளறுகிருய்?"

"என்னமோ நல்லதைப் போலக் கெட்டதா ஆனல், நாளைக்குச் சித்தியும் கண்ணனும் என்ன செய்வாங்க!"

"ஹூம்!" என்று ஒருபெரு மூச்செறிந்தான்.

"அக்கா... அம்மா உங்களைக் கூப்பிடுருங்க!"—என்றுசொல்லிக் கொண்டே கண்ணன் தலையை நீட்டினன்.

"இதோ வந்துட்டேன் கண்ணு! யாருக்கும் ஐம்பது வய துக்கு மேலே போனல் ஆசை யெல்லாம் ரொம்ப அதிகமாகும் போல இருக்கு. இல்லேன்னல் இந்தக் கிழங்களுக்கு எல்லாம்

மூளை இப்படிக் கெட்டுப் போகுமா?" ராஜம் தன் போக்கில் சொல்லிக்கொண்டு வந்தாள். ஆனால் கிருஷ்ணனின் கவனமெல்லாம் கண்ணன் மேலேயே பதிந்து இருந்தது.

"நான் வரட்டுமா!"—கண்ணனின் கையைப் பிடித்துக் கொண்டு ராஜம் கேட்டாள். அவன் தலையையாட்டினான். அவனுடைய மனம் என்னவோ பழைய நினைப்புகளிலேயே நின்று கொண்டிருந்தது. அவர்கள் போய்விட்டனர்.

★

பொங்கல் விழா வந்துவிட்டது. புரொபஸர் புண்ணிய கோடியின் வீடு ஒரே கலகலப்பாக விளங்கியது. ஆனால் கிருஷ்ணனுக்குமட்டும் மனம் ஒரு நிலையில் இல்லை. அவன் ஊரிலிருந்து வந்ததிலிருந்து ஒன்று மாற்றி ஒன்றாக எண்ணி எண்ணி மனம் புழுங்கியவாறே பொழுதை ஓட்டிக் கொண்டு வந்தான். அன்று அவனுக்கே ஒரு சலிப்பு ஏற்பட்டுவிட்டது. பகல் சாப்பாடு முடிந்தவுடன் ஊரையாவது சுற்றிப்பார்த்து வரலாமென்று தனியாகக் கிளம்பினான். எங்கெங்கேயோ சுற்றினான். வீட்டுக்குத் திரும்பும்போது சரியாக மணி ஐந்து!

"ராஜம், ராஜம்" என்று முன் கட்டில் இருந்தவாறே கூப்பிட்டான். ஒன்றும் பதில் வரவில்லை.

"கண்ணா..."—உள்ளேயிருந்து தாரா வந்தாள். அவளைப் பார்த்ததும் அவனுக்கு ஒரு அதிர்ச்சி! முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டான்.

"அவர்கள் எல்லோரும் கடைத் தெருவுக்குப் போயிருக்காங்க"—அவள் சாவதானமாகப் பதில் சொன்னாள். ஆனால் கிருஷ்ணன் மனம் மட்டும் 'திக், திக்'கென்று அடித்துக் கொண்டது. குனிந்த தலை நிமிரவேயில்லை. சற்றுநேரம் மௌனம். கிருஷ்ணன் தலையை நிமிர்த்தி ஓரக்கண்ணால் பார்த்தான். அவள் திரும்பி உள்ளே போய்க் கொண்டிருந்தாள். நெஞ்சிலே ஒரு படபடப்பு.

"ராதா......"—அவனுடைய குரல் 'கம்மி'யது. அவள் திரும்பிப் பார்த்தாள். ஒரு கேலிப் புன்னகை அவள் உதட்டில் நெளிந்து கொண்டு இருந்தது.

"நான் ராதா இல்லை; தாரா!"

அவளுடைய சாந்தமான பேச்சு அவனுக்குக் கொஞ்சம் தைரியத்தை அளித்தது.

"அது தெரியுது ராதா! உன்னிடம் ஒரு வார்த்தை பேசணும்னு நான் ஊரிலேயிருந்து வந்ததிலிருந்து நினைத்துக் கொண்டிருந்தேன்."

"இன்னும் உன்னுடைய வார்த்தையைக் கேட்டு ஏமாறுவதற்கு நான் பழைய ராதா இல்லை. நீ ஒருதரம் எனக்குக் கொடுத்த புத்தி போதும்! இப்பொழுது நான் ரொம்ப மாறியிருக்கிறேன். அதுவும் உன்

ளோடு பழகினதிலே ஏற்பட்ட அனுபவம்தான் மிஸ்டர் கிருஷ்ணன்."

"நான் கேட்க வந்தது வேறு ராதா. ஆனல் நீ என்னைத் தவருகப் புரிந்துகொண்டு பேசுகிருய்?"

"நீ கேட்க வந்தது எனக்குத் தெரியும். என்ன இந்த ராதா நாம் கைவிட்டவுடனே திருச்சியிலிருந்து ஓடிப்போனளே! இவள் எப்படி புரொபஸர் புண்ணியகோடியைக் கல்யாணம் பண்ணிக்கொண்டாள் என்று எண்ணுகிருயா? கேட்டுக்கொள்: உன்னுலே கைவிடப்பட்ட உடனே ஊராராலேகிந்திக்கப்பட்டு, இந்த சென்னைக்கு நானும் என் தாயாரும் ஓடிவந்தோம். வந்த இடத்திலே என் தாயாருக்கு இந்த புரொபஸர் வீட்டிலே சமையற்காரி உத்தியோகம் கிடைத்தது. அந்த உத்தியோகத்தையும் என்னுடைய அம்மா முழுசா மூன்று மாதம் பார்க்கவில்லை. என்னைப்பற்றிய கவலையே அவள் உயிருக்கு எமனுக வந்துவிட்டது. அவள் இந்த உலகத்தை விட்டே போய் விட்டாள். அப்புறம், நான் அனுதையாய்விட்டேன். எனக்கு இந்த புது ஊரிலே என்ன செய்கிறது என்றே புரியவில்லே! உதவிக்காகப் புரொபஸரை அடுத்தேன். அவர் என்னுடைய கதையை யெல்லாம் கேட்டார். என் நிலேமையையும் பார்த்தார். அவருக்கு என்மீது இரக்கம் பிறந்தது. உதவி செய்வதாக ஒத்துக்கொண்டார். அந்த வார்த்தை அவருக்கு ஏற்படுத்திய உணர்ச்சிதான் தந்தையின் பெயரைச் சொல்ல உரிமையற்று என் வயிற்றிலே தவித்துக் கொண்டிருந்த குழந்தைக்கு அவரையே தந்தையாக ஆகும்படிச் செய்துவிட்டது!"

"என்ன..." — அவன் உள்ளத்திலே ஒரு அதிர்ச்சி! முகத்தில் ஆச்சரியக் குறிகள்!

"இதைக் கேட்க ஆச்சரியமா இருக்கிறதா கிருஷ்ணு?"—அவள் முகத்திலே ஒரு இறுமாப்பு. பேச்சிலே ஒரு அலட்சியம்.

அவன் முகம் சுருங்கியது.

"உனக்கு ஆச்சரியமாகத்தான் இருக்கும்! ஒரு பெண்ணுடைய வாழ்க்கையைப் பாழடிக்க மாத்திரம் பழகி இருக்கிற உனக்கு பாழடைந்த ஒரு பெண் தன் வாழ்க்கையைச் சீர்படுத்திக் கொண்டாள் என்பதைக் கேட்க ஆச்சரியமாகத்தானே இருக்கும்!"

"ராதா நீ என்னே மன்னித்துவிடு..." அவன் குரலிலே ஒரு தழதழப்பு. அவன் உடல் குன்றியது. இதைக் கண்டதும் அவ்வளவு நேரம் இறுமாப்போடு பேசிக்கொண்டிருந்த ராதாவின் கண்களில் நீர் துளிர்த்தது. அவள் நெஞ்சை உடைத்துக் கொண்டு ஒரு பெருமூச்சு வெளிக்கிளம்பியது.

"ஹூம்... கிருஷ்ணு! உன்னுடைய கோழைத்தனத்தை இப்பொழுதாவது உணரும் சக்தி வந்ததே அதுவேபோதும்! நான் அதைத் தவிர வேறு எதையும் உன்னிடமிருந்து

எதிர்பார்க்கவில்லை. அந்த ஒரே காரணத்தினுல்தான் என்னுடைய ஆத்திரத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு உன்னிடம் இவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருந்தேன்''

''ஈ......'' திறந்த வாயிலிருந்து மேற்கொண்டு எந்த ஒலியும் வெளிவரவில்லை. துரோகத்தை உணர்ந்த தன்மையால் நாக்குக்கூட நாணமடைந்து விட்டதுபோலும்!

அவனுடைய மனம் குழம்பியது. 'அத்தான்...' என்று அழைத்த கண்ணனின் நினைவு அவனுக்கு வந்தது. கண்ணன் அவனுடைய காதலில் கனிந்த கனி. 'அப்பா' என்று அன்போடு அழைக்கவேண்டியவன் 'அத்தான்' என்கிருன் என்ற எண்ணம் அவனுடைய உள்ளத்தைத் துளைத்தது.

ஏதோ ஒரு பயம்—அந்தப் பயம் ஏற்படுத்திய சந்தேகம். மீண்டும் அவனுக்கு மனக் குடைச்சல்.

''ராதா...நான்தான் உனக்குத் துரோகம் செய்தவன் என்று 'அவருக்கு'த் தெரியுமா?'' என்று அவன் அவளிடம் கேட்டான்.

''ஏன்? அவருக்குத் தெரிந்திருந்தால் நீயும் என்னைப்போல ஓடிவிடலாம் என்று பார்க்கிருயா? உங்ங்...ஆணுகப் பிறந்த உனக்கு ஏன் அந்தக் கவலையெல்லாம்! பெண்ணுகப் பிறந்திருந்தால் அல்லவா இதுபோன்ற அவமானத்துக்கு எல்லாம் பயப்படவேண்டும்!''

அவனுடைய வெந்த உள்ளத்திலே வேல்போலப் பாய்ந்தது ஒவ்வொரு வார்த்தையும். அவனுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியாமல் வாயடைத்துப் போய்விட்டது.

''உம்...பயப்படாதே கிருஷ்ணு! புரொபஸருக்கு நீதான் என்னை நிர்க்கதியாக்கிய மகானுபாவன் என்று தெரியாது. அவர் வேறு எந்தக் கிருஷ்ணனே என்று நினைத்துக்கொண்டிருக்கிருர். நான் இனிமேல், நீதான் என்னை ஏமாற்றிய 'காதல் வீரன்' என்று அவரிடம் சொல்லப் போவதில்லை. இதுபோல நான் காட்டிக்கொடுக்காமல் இருப்பதற்குக் காரணம் உன்மேல் நான் கொண்டிருந்த பழைய காதல் என்று எண்ணிவிடாதே! இது எனக்காக அவர் செய்து வருகின்ற உதவிக்கு நன்றி. அவருடைய ஒரே மகள் ராஜம் உன்னைப்போன்ற ஒரு அயோக்கியனின் மனைவியாக இருக்கிருள் என்று அவர் மனவேதனை அடையக் கூடாது என்பதற்குத்தான். தெரிந்து கொண்டாயா?''

''ராதா, நான் உனக்கு செய்த துரோகத்திற்கு, நீ என்னை எந்த முறையிலே தண்டித்தாலும் தகும்! ஆனுல் நீ எனக்கு எந்தத் தண்டனையும் தரவில்லை! இதற்கு மாருக, இன்னும் எனக்கு உதவியே செய்கிருய். ராதா... ராதா... நான் எந்த முறையிலே உனக்குக் என் நன்றியைக் காட்டுவது? நான் செய்த பழிக்கு என்ன பரிகாரம் செய்வது?...''

"நீ எனக்கு ஒன்றும் செய்ய வேண்டாம்! அவர்—உன் மாமனுர், என்னைக் கல்யாணம் செய்து கொண்டதினுலே தன்னுடைய சொந்த மகளினுலேயே வெறுக்கப்பட்டிருந்தார். இப்பொழுது கூட ராஜத்திற்கு அவர் மேலே அந்தப் பழைய அன்பு உண்டாகவில்லை. அநியாயமா, நீ செய்த பழிக்கு அவர் தண்டனை அனுபவிக்கிருர். இதை உன்னுலே மாற்ற முடியுமா? உன்னுலே அதைச் செய்ய முடியுமானுல்..."

ராதா சொன்னதை அவனுல் செய்ய முடியும் என்ற துணிவு அவனுக்கு இருந்தது. அவன் தான் ஏற்கனவே ராஜத்தின் மனத்தைப் பாதி கரைத்து வைத்திருக்கிருனே!

அவன் 'செய்கிறேன்' என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினுன். அவள் முகத்தில் வெற்றிக் களிப்பு ஒரு மலர்ச்சியை உண்டுபண்ணியது.

"அது போதும் எனக்கு!"

"ராதா..." எதையோ சொல்ல வாயெடுத்தான்.

"மிஸ்டர் கிருஷ்ணன்...ராதா என்ற அந்தப் பழைய பெயரை இதோடு விட்டுவிடு. நான் இப்போ மிஸஸ். தாரா புண்யகோடி. உன் மனைவி ராஜத்தின் சின்னம்மா. உம்... அவர்கள் வருகிற நேரமாகி விட்டது. இந்த வீட்டில் உன்னுடைய ஸ்தானம் மாப்பிள்ளை. அந்த மதிப்பையாவது நீ ஒழுங்காகக் காப்பாற்றிக் கொள்!" என்று சொல்லிவிட்டு 'விர்'ரென்று அவள் உள்ளே போய்விட்டாள்.

அவள் வஞ்சம் தீர்த்துக் கொண்ட முறை அவனுக்கு விசித்திரமாக இருந்தது. அவள் இது மாதிரி நடப்பாள் என்று அவன் கொஞ்சங் கூட எண்ணவில்லை.

கிருஷ்ணனின் கண்களிலிருந்து கண்ணீர் உடைத்துக் கொண்டு வெளிவந்தது. அந்தக் கண்ணீரால் அவன் செய்த துரோகத்திற்குக் கழுவாய் செய்துவிட முடியுமா?

அவன் தன் விரலில் கிடந்த மோதிரத்தைப் பார்த்தான். ஒரு பெருமூச்சு வெளிக் கிளம்பியது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு வெளியே கிளம்பினுன்.

அவனிடம் தவறை உணரும் சக்தி இருக்கிறது. ஆனுல் அந்தத் தவறைச் செய்யாமல் இருப்பதற்குத் தைரியம் இல்லையே!

★

வெளியில் சிறுவர்கள் கும்மாளமடித்துக் கொண்டிருந்தனர். கிருஷ்ணன் வராந்தாவில் நின்றபடி அந்த வேடிக்கையை ரசித்துக் கொண்டிருந்தான். பொங்கலுக்காகப் புண்ணியகோடி எடுத்துக் கொடுத்த புது உடைகள் அவனை அலங்கரித்துக் கொண்டிருந்தன.

"அத்தான்"—என்ற குரல் கேட்டு அவன் திரும்பிப் பார்த்தான். கையில் செங்கரும்போடு கண்ணன் நின்று கொண்டிருந்தான்.

"இதைக் கொஞ்சம் நறுக்கித் தாங்களேன் அத்தான்!"

கிருஷ்ணன் கண்ணன் தந்த கரும்பை வாங்கி வெட்டிக் கொடுக்க ஆரம்பித்தான். கண்ணன் ஒவ்வொரு துண்டாகச் சுவைத்துத் துப்பிக்கொண்டிருந்தான்; அவன் கரும்பைத் தின்பதைப் பார்க்கப் பார்க்க அவனுக்கு ஒரு மகிழ்ச்சி. என்னதான் அத்தான் என்ற போர்வையில் இருந்தாலும் அப்பா என்ற உணர்ச்சி போய்விடுமா! "கண்ணு! அத்தானை உள்ளே கூப்பிட்டுக் கொண்டு வா!"—புண்ணியகோடி உள்ளேயிருந்து குரல் கொடுத்தார்.

"கண்ணு... எழுந்து உள்ளே வா, உங்கப்பா கூப்பிடுகிறார்!" என்று சிறுவனை இழுத்துக் கொண்டு கிருஷ்ணன் உள்ளே நுழைந்தான். அங்கே புண்ணியகோடி, தாரா, ராஜம் ஆகிய மூவரும் நின்று கொண்டிருந்தனர்.

"தாரா... அந்த மோதிரத்தை எடுத்துக்கொண்டு வா"

தாராவின் முகத்திலே ஒரு சிரிப்பு. அவள் 'மேஜை டிராயரை'த் திறந்து ஒரு சிறு பெட்டியை எடுத்துப் புண்ணியகோடியிடம் கொடுத்தாள். புண்ணியகோடி அதைத் திறந்து, அதன் உள்ளிருந்த பவுன் மோதிரத்தை எடுத்தார்.

"இதை விரலிலே மாட்டிக் கொள்ளுங்கோ மாப்பிள்ளை!" கிருஷ்ணன் அந்த மோதிரத்தைக் கையில் வாங்கினான். ராஜம் அந்த மோதிரத்தைப்பார்த்தாள்.

"ஏனப்பா... மாப்பிள்ளைக்கு முதல்...முதலிலே செய்து போடுறது வைரமோதிரமா இருக்கக்கூடாதா? பவுன் மோதிரம் தானா கிடைத்தது!"

"என்ன ராஜம், பவுனென்றால் மட்டமா? என் கிட்டே கூட ஒரு வைரமோதிரம் இருந்தது. ஒருநாள் அந்த மோதிரம் நெருப்பிலே தவறி விழுந்து விட்டது. திருப்பி அதை எடுத்துப் பார்த்தபொழுது அந்த வைரத்திலே இருந்த 'பளபளப்பு' எங்கே போனதென்றே தெரியவில்லை! அப்போதான் நான் தெரிந்துகொண்டேன், வைரத்தின் லட்சணத்தை!"

"நிசம்மாவா சித்தி!"

தாரா சிரித்தாள்.

"ஆமாம் ராஜம், பவுனைக் காட்டிலும் பளபளப்பாக வைரம் பார்வைக்கு இருக்கலாம்! ஆனால் நெருப்பிலே போட்டுச் சோதனை செய்தால், வைரம் பல்லைக்காட்டும். பவுன்மாத்திரம் மாற்று உயர்ந்து மதிப்பாகக் காணப்படும்"—'புரொபஸர்' தாராவின் வார்த்தைகளுக்கு விளக்கம் தந்தார்.

இதைக் கேட்ட ராஜம் ஏதோ மனதிற்குள் முணுமுணுத்துக் கொண்டாள். கண்ணனுக்கு அக்கா முணுமுணுப்பதின் காரணத்தை அறிய ஆசை உண்டாகியது. கிருஷ்ணனின் கையைப் பிடித்துப் பார்த்தான். ஒரு விரலில் பவுன்மோதிரமும் மற்றொரு விரலில் வைரமோதிரமும் கிடந்தன.

"அக்கா இதைப்பார்த்தியா, அத்தான் கையிலே?" என்று அவன் விரல்களைக் காட்டினான்.

"அப்பாவுக்குத் தத்துவம் பேசத்தான் தெரியும்! காரியத்திலே கோட்டை விட்டுவிடுவார். நீ பெரியவனுய்ப் போனபிறகாவது அத்தானுக்கு வைரத்திலே மோதிரம் செய்துபோடு!'

சிறுவனுடைய சொல்லை வைததுக்கொண்டே, அப்பாவைச் சிலேடையாக ஒரு தாக்குத் தாக்கினுள் ராஜம. அவளுடைய ஓரக்கண்கள் புண்ணியகோடியையும், தாராவையும் கூர்ந்து கவனித்தவாறு இருந்தன! புண்ணியகோடி பெருமூச்செறிந்தவாறு தாராவைப் பார்த்தார். தாரா புன்னகை ஒன்றை அவருக்குப் பதிலாக அளித்தாள்.

அவளுடைய பார்வை, புண்ணியகோடி மீதும், கிருஷ்ணன் மீதும் பாய்ந்தது. அவர்கள் இருவரும் ஒருவர் பக்கத்தில் மற்றொருவர் நின்றுகொண்டிருந்தனர்.

கண்ணன் வைரமோதிரத்திற்குப் பக்கத்தில் இருக்கும் பவுன்மோதிரத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். அவனுக்கு வைரத்தின் 'ஜொலிப்பு' மிகவும் பிடித்தமாக இருந்தது.

அவனுக்கு மட்டுமென்ன ராஜத்திற்குக்கூடத்தான், புண்ணியகோடியை விடக் கிருஷ்ணனே மிகவும் பிடித்திருந்தது! பாவம் அவர்கள் இரண்டுபேரும் அனுபவத்தில் குழந்தைகள் தானே!

எவரெடி கன்பெக்ஷனரி ஒர்க்ஸ்
நிறுவனம் 1942ல்
உயர்ந்த ரக மிட்டாய் தினுசுகள்
சாஸ்திரீக முறைப்படி தயாரிப்பவர்கள்.
எங்களிடம் பாய்ல்டுகூட்ஸ் பான்கூட்ஸ், காரமல்ஸ்
லோஜென்சஸ் இன்னும் பலவகை மிட்டாய்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்.
விவரங்களுக்கு:
72, எல்லம்மன் கோயில் தெரு
மேற்கு மாம்பலம்
சென்னை-17

தமிழ் விருந்து

'தமிழ்த்தும்பி'

12. பாண்டியன் சபதம்

பாண்டியநாட்டு அரியாசனத்தில் இடம்பெற்றபோது நெடுஞ்செழியனின் வயது மிகக் குறைவு. அவ்வளவு இளைய பருவத்தில் அதுமட்டும் யாரும் பாண்டிய மன்னன் ஆனதில்லை. வயதில் குறைந்தவனானாலும் வீரத்தில் சிறந்தவனாகக் காணப்பட்டான் நெடுஞ்செழியன். அறிவு அதிகமாயிருந்தாலும் அனுபவம் மிகச் சொற்பமாக இருந்தது அவனுக்கு. சிறு வயதிலேயே சிறந்த பயிற்சி பெற்று அநேக பெரும் வீரர்களை அவன் விளையாட்டிடத்திலே வீழ்த்திப் பெருமை பெற்றான். திக்கெட்டும் அவன் வீரம் முரசொலித்தது.

தமிழ்நாட்டு மூவேந்தர்களுக்கும் ஒற்றுமை என்ற பண்புக்கும் காததூரமோ என்னவோ தெரியவில்லை. எப்போது பார்த்தாலும் ஒருவரைப் பார்த்து மற்றொருவர் உறுமிக்கொண்டேயிருந்தனர். எந்நேரமும் இன்னொரு நாட்டைப் பிடிக்கச் சதி ஒரு நாட்டில் நடந்துகொண்டிருக்கும். சமயத்தில் இரு நாடுகளின் கூட்டுச் சதியும், யுத்த தந்திரமும் மூன்றாவது நாட்டை வீழ்த்திப் பணிய வைக்கும். இலக்கு துளைக்கப்பட்ட பின் எய்யப்பட்ட அம்பு நிலத்தில் விழுந்துவிடுவதில்லையா? அதே போலக் கூட்டுச் சதியின் விளைவு முடிந்தபின், அதுமட்டும் சேர்ந்து பொருத இருவர் தமக்குள் வேற்றுமை பாராட்டி தமக்குத் தாமே முடிவு தேடிக்கொள்வர். ஒருவரை ஒருவர் வெறுத்துச் சீறும் வெறுப்புப் பண்பிலாவது எப்போதும் ஒற்றுமை இருக்கிறதே என்று ஒளவையார் போன்றவர் இடித்துரைக்க வழி செய்தனர் தமிழ்நாட்டு மூவர்.

நெடுஞ்செழியன் பாண்டிய மணி மகுடத்தைத் தரிக்கும் போது நாட்டின் நிலையையும், சதி சூழ்ச்சிகள் பிறக்குமிடங்களையும் நன்றாக அறிந்திருந்தான். எதையும் மேல்போக்காக மேய்ந்து விட்டுவிடுவதில்லை அவன் ஆராய்ச்சி. சூதுக்கு ஒப்பேற்றும் எந்தச் சதிச்செயலையும் வதந்தி வாயிலாகத் தெரிந்தாலும் அதை அலசுவான். மேலும் வயதும் குறைந்து அனுபவமும் குறைந்திருந்ததால் அவன் காற்றுவாக்கு வதந்திகளிடமும் கூரிய கண்ணோட்டமும் அரிய ஆய்வும் செலுத்தினான்.

"தமிழ்நாட்டின் செல்வக் களஞ்சியமான பாண்டியநாடு ஒரு சிறு பையன் கையில் உலவுகிறது. அரசியல்சுமை தாங்க

அவன் தோள் மிக மிகச் சிறியது. விளையாடவேண்டிய சிறுவன் வேந்தனாக வீற்றிருக்கிறான். அரச அனுபவம் அவனுக்கு முற்றும் புதிது. சேறும் சகதியும் மிக்க அரசியல் குளத்தில் ஆழம் தெரியாது அவன் காலை விட்டுவிட்டான். நம்மிடம் ஏராளமான சேனை பலம் உள்ளது. அசைவினால் இருமருங்கும் உள்ள மணி ஒன்றோடொன்று மோதி ஒலிக்கும் யானை பலம் நம்மிடம் அதிகம். பரந்த அடியினையும் பெரிய காலினையுமுடைய யானையின் தொகுதி நம்மிடம் உண்டு. மற்றும் குதிரைப் படை, தேர்ப் படை, காலாட் படை ஆகியவையும் மிகத் தேர்ச்சிபெற்றவை. படை வலிமையைப் பொறுத்த மட்டும் நாமே பெரியவர். நெடுஞ்செழியன் அனுபவமற்ற சிறியவன்" என்ற போக்கில் சேரநாட்டிலும் பேச்சுக் கிளம்பி வளர்ந்தது. சிற்றரசர்கள் வேறு பல படிகளாகப் பேச்சைத் திருத்தி மாற்றித் தம் நாட்டில் குழப்பத்தை ஊட்டி வந்தனர். அவர்கள் எப்போதும் யார்கூடவாவது சேர்ந்து ஒருவரை வீழ்த்து வதைத்தானே செய்வர்! படை பலம் மிக்கவரோடு சேர்ந்து படை குறைந்தவரை முறியடித்து வெற்றியின் மகிழ்ச்சியைக் கொண்டாடுவது அவர் தம் இயல்பு.

மற்ற பேரரசர்கள், சிற்றரசர்களின் இந்த நிலையை நெடுஞ்செழியன் நன்றாக ஊன்றிக் கவனித்து வந்தான். எந்த நேரமும் ஆபத்து தன் நாட்டைச் சீர்குலைக்கலாம் என்ற அச்சம் எப்போதும் இருந்து வந்தது. போர், முற்றுகை, அழிவு இவை எவ்வளவு மோசமான செயல்கள்! யுத்த தந்திரத்தில் வல்லவர்களான அவர்களோடு சமாதானம் செய்துகொண்டால்...? நியாயம் என்ற ஒன்று இருந்தால் தாராளமாகச் சமரசம் பேசலாம். அக்கிரமமான ஆக்கிரமிப்புச் சதிக்குப் பணிந்து கொடுத்தால் அது அறிவீனமல்லவா? தன் குறைந்த பிராயத்தையும், சரியான உருப்பெறாத அனுபவச் செல்வத்தையும் கொண்டல்லவா அவர்கள் தன்னை மிகக் குறைவாக மதிப்பீடு செய்கின்றனர்? நியாயத்தை நிலைநாட்டச் சண்டையா, அல்லது நாட்டுமக்கள் நலன் வாழச் சமாதானமா? மனதைத் துளைக்கும் இந்தக் கேள்விக்கு அவனால் பதில் தர முடியவில்லை. சிந்தனை அலைகள் அவன் உள்ளத்தில் வீசின.

* * *

போர் மூண்டது. பாண்டிய நாடு படுகளமாக மாறிற்று. மக்கள் மாய்ந்துகொண்டிருந்தனர். பாசறையில் மன்னன் நெடுஞ்செழியன் இன்னும் சிந்தித்துக் கொண்டிருந்தான். சண்டையா, சமரசமா? வீடுகள் எரிந்தன. நாடு சூறையாடப்பட்டது. மதுரை காடாக மாறிற்று. மடிந்த வீரர், துடிக்கும் மக்கள், கதறும் பெண்மணிகள், கூக்குரலிடும் குழந்தைகள் ஆகியோரின்

எண்ணிக்கை ஏறிக்கொண்டே போயிற்று. கட்டிடங்கள் எல்லாம் மண்ணோடு மண்ணாகிவிட்டன. சூரிய வெயிலுக்கு ஒதுங்கக்கூட அங்கு நிழல் இல்லை. உயிரைச் சேமிக்க ஓடிய மக்கள் 'நெடுஞ்செழியன் கொடுங்கோலன்! ஏன்தான் அவன் நாட்டில் நாம் வாழ்ந்தோமோ? எதிரிகளிடமிருந்து நம்மைக் காக்க அவனிடம் திராணியில்லை! அவன் ஒரு மன்னன். தாய்க்குக் கட்டிக்கொள்ளச் சேலையில்லாத போது தனயன் சேலைத் தானம் வழங்கினானாம்! கொடுங்கோலன் நெடுஞ்செழியன் வீழ்க!' என்ற ஒலி மிகுந்து கேட்டது.

அரச குடும்பம் அரண்மனை இரகசியக் குகை வழியாக மதுரையைவிட்டு வெளியேறிற்று. முன்பின் அறியாத பரந்த காட்டுப்பாதை வழியாக அக்குடும்பம் சென்றது. முள்ளிலும், கல்லிலும், அனல் தகிப்பிலும் அவர்கள் வழிநடந்தனர். பஞ்சம் தலைவிரித்தாடிற்று. மதுரையிலிருந்து வெளியேறிய மக்கள் காட்டில் செல்லும் செழியனிடம் தருமம் கேட்டனர். செழியன் எங்கெங்கோ தேடிப் பார்த்தான். ஒரு சல்லிக் காசு இல்லை. என்ன பரிதாபம்! மழைபோல் வண்மை வழங்கிய

மன்னன் இப்போது வறுமை யாளன்!

மதுரையை விட்டோடி வந்த பஞ்சைக் கூட்டம் இப்போது பெரிதாகத் தெரிந்தது. அக்கூட்டத்திலே அரச கவிகளும், மற்றும் அநேக புலவர்களும் இருந்தனர். தமிழ்க் கவிகளைப் போற்றின தார்வேந்தன் இப்போது அவர்கள் அவதியுறும் காட்சியைக் காணவேண்டி வந்தது. போரின் கோரத்தை அக் கும்பலில் ஒருவர் கண்ணீர் வழியப் பாடிக்கொண்டிருந்தார். அக்குரல் செழியனுக்கு மிகவும் அறிமுகமான குரல்! அவன் அக்குரலுக்கு உடையவரைப் பார்த்தான். எங்கோ பார்த்த நினைவு! குரலின் கம்பீரம் அவர் மாங்குடி மருதனார் என்று அவனிடம் தெரிவித்தது. என்ன கொடுமை! நம் தலைமைக் கவி இப்படித் தன்னை அறிந்து கொள்ளாதபடி தடுமாறுவதா? தன்னை அடையாளம் கண்டு கொள்ள அவரால் முடியவில்லையா அல்லது பாண்டிய நாட்டுப் பக்கம் பார்வையைச் செலுத்தலாகாது என்று அவர் முடிவு கட்டிவிட்டாரா?

நெடுஞ்செழியனால் தாள முடியவில்லை.

* * *

வியர்வைக்குளத்தில் நனைந்து விட்டிருந்த நெடுஞ்செழியன் விழித்தெழுந்தான். அவனுக்கு ஒரே பயங்கரமாக இருந்தது. என்ன கோரமான கனவு! தான் கொடுங்கோலன் என்ற பெயரை அடைவதா? இரப்போருக்கு ஒன்றும் தர இயலாத இரக்கப் படத்தக்க வறுமை நிலையடைவதா? தன் அவையை விட்டு மருதனின நாகனார் போன்ற பெரும்புலவர்கள் அகல்வதா? முடியாது, ஒருக்காலும் முடியாது. தான் உயிர் வாழுமட்டும் முடியாது. அக்கிரமத்தையும், அநீதியையும் அறவே ஒழித்துக் கட்டப் போர் செய்வதே மேல். அறத்துக்காக, நீதிக்காக, நேர்மைக்காகப் போர்!

அடுத்த நாள் நெடுஞ்செழியன் சபையைக் கூட்டினான். எல்லோரும் அரச சபையில் இருந்தனர். மாங்குடி மருதனார், இன்னும் மற்றைய புலவர்கள் கம்பீரமாக வீற்றிருந்தனர். பெருமை தொனிக்கும் குரலில் நெடுஞ்செழியன் சூளுரை செய்தான்:

"இவன் நாடு சிறக்கத்தக்கது என்பவர் நம் நகைப்புக்கு இடமாவர்; இந்த இளையவனிடம் அனுபவமும் அறிவும் குறைவு; நாம் மிகுந்த சேனைகளை உடையவர் என்று இறுமாப்புக் கொண்டு நம் படை வலிமையைத் தாழ்வாக மதிப்பிடும் வஞ்சக அரசர்களை நான் முறியடிக்காவிட்டால், அவர் தம் கொட்டத்தை அடக்காவிட்டால்,

"இப்போது என் நிழலில் இன்பமும், அமைதியும் காணும் மக்கள் தங்க இடமும், ஒதுங்க நிழலும் வாழ வசதியும் இல்லாத மக்கள் போல் என்னைக் கொடுங்கோலன் என்று தூற்றுக.

"மழைபோல் வண்மை அருளும் என்னிடமும் என் சுற்றத்தவரிடமும் கூட வள்ளல்தன்மை காட்டாதபடி, ஏழைகளுக்கு ஒன்றும் வழங்க முடியாத பரிதாபமான வறுமை நிலை வந்து அடைக!

"உயர்ந்த அறிவும், சிறந்த மனித உள்ளமும், மேம்பாடுடைய ஒழுக்கமும் கொண்ட பெருங் கவிகளான மாங்குடி மருதன் போன்றோர், நிலைபெற்ற புகழ் இதுமட்டும் தன்னகத்தே கொண்ட என் நாட்டையும், என்னையும், பாடாது நீங்குக."

சபையில் அமைதி குடிகொண்டது. இந்த உறுதியான சூளுரையைக் கேட்ட மாங்குடி மருதனின நாகனார் மயிர் சிலிர்த்தார்; ஆனந்தக்கண்ணீர் பெருக்கினார், அன்பின் உயர்வை நினைந்து. எல்லோர் முகத்திலும் 'பளிச்'சென்ற பிரகாசம் தவழ்ந்தது. "நெடுஞ்செழியன் வெற்றி வாழ்க!" என்ற வாழ்த்தொலி வானைப் பிளந்தது.

தலையாலங்கானம் எனுமிடத்திலே போர் மூண்டது. பாண்டியன் நெடுஞ்செழியனை வெற்றி மகள் மாலை சூட்டினாள். வெறும் நெடுஞ்செழியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஆனான்.

* * *

இந்தப் புறநானூற்றுப் பாடலை பாண்டியன் நெடுஞ்செழியனே பாடியுள்ளான். சூளுரை பகர்ந்த அரசனே பாடல் இயற்றியுள்ளதால் அதில் உணர்ச்சியின் திரட்சி காணப்படுவது இயற்கையே. அரசர் கவிகளை ஆதரித்தது மட்டுமல்ல, அவர்களே கவிகளாகவும் இருந்தனர் என்பதற்கு இப்பாடல் ஒரு சான்று. தமிழ்ப்பற்று அரசரிடம் பெரும் அளவில் இருந்தது; அவர்களே கவிதை புனைந்து மொழிச்குப் பெருமை வளர்த்தனர்.

நாட்டு மக்களிடம் அரசன் காட்டிய இடையறா அன்பு இப்பாடலில் பிரதிபலிக்கிறது. மக்கள் 'கொடுங்கோலன்' என்று அழைப்பதை மன்னன் சகிக்க மாட்டான். அதைவிடப் பெரும் இழுக்கு அவனுக்கு இல்லை. வள்ளல்தன்மை தம் கரங்களை விட்டுப் பிரிவது மன்னன் உள்ளத்திற்குச் சித்திரவதையாக உள்ளது. கவிஞர் தம் நாட்டைப் பாடுவதை இழப்பதை விட அரசன் தற்கொலை செய்து கொள்வதை வரவேற்பான் போலும்! கவிகளிடம் தான் என்ன கொள்ளை அன்பு! அவர்களுக்குத்தான் எத்தனை உயர்வை அளிக்கின்றனர்!

நகுதக்கனரே நாடுமீக் கூறுநர்
இளையவ னிவனென வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையேம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎனாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக
ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவனாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைக வென்னிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா வின்மையா னுறவே.

—புறநானூறு

[நகுதக்கனர்—சிரிக்கத்தக்கவர்; மீக்கூறுநர்-மிகுத்துச் சொல்பவர்; பா-பரந்த; பணைத்தாள்-பெரிய கால்; மா-குதிரை; இறை-அரசர்; இரப்போர்-வறுமையாளர்; ஈயா இன்மை-தரமுடியாத தரித்திரம்]

வளரும் இலக்கியம்

ஆட்சியின் அடிப்படையில் புதைந்துகிடக்கும் ஊழல்களை அம்பலப்படுத்தி, நேர்மை வழி வகுக்கும் அளவிலே தோழர் நா. இராசவேல் 'ராஜிநாமா'வை ஆக்கித்தந்திருக்கிறார், நாடக உருவில். இது அலுவலகப் படப்பிடிப்பு. சோமசுந்தரம் உணர்ச்சி மிகுந்த குணச்சித்திரம். உள்ளந்தொடும் சம்பவக் கோவையுடன் சுவையுள்ள இயற்கையான உரையாடல். கவியரசர் பாரதிதாசன் தம் முன்னுரையில் 'அகம் தெளிந்த எழுத்தாளர் இராசவேலர்—அந்தமிழ் நாட்டார் நன்றிக்குரியாரானார்' என்று போற்றுகின்றார். பின், ஆசிரியரின் வெற்றிக்கு, வெற்றி முகமன் கூறும் 'ராஜிநாமா'வின் வெற்றிக்குக் கேட்கவும் வேண்டுமா?

புரட்சிக் கவிஞரின் நினைவு நம் உள்ளத்தில் முழுவடிவம் பெறுமாறு 'பாரதிதாசனின் பண்புகள்' என்ற புத்தகத்தை நறுக்குத் தெறித்தாற் போன்ற தமிழ் நடையில் எழுதியிருக்கிறார் நண்பர் இராசவேல். தமிழ் நாட்டு மக்கள் கவியரசரை அறிந்து கொள்ள இந்நூல் அரிய வாய்ப்பு! ஆசிரியரது முயற்சியை வரவேற்கிறோம். இச்சுவடி நல்ல வரவேற்புப் பெறுமென நம்புகிறோம்.

ராஜிநாமா; பாரதிதாசனின் பண்புகள்—ஆசிரியர்: நா. இராசவேல், சூழ்நிலை வெளியீடு, 9, குருவப்ப செட்டி தோட்டம் சந்து சென்னை—21. விலை முறையே 0-8-0, 0-3-0

வாழ்க்கையைப் பிரதிபலித்துக்காட்டும் ஐந்து கதைகள் இடம் பெறுகின்றன 'ராஜாடி ராஜா' என்ற புதுத் தலைப்புக் கொண்ட இத்தொகுதியிலே. ஒரு பாவமும் அறியாத மாரி வீண்பழி சுமத்தப்பட்டுத் திருட்டுப்பட்டமும் சூட்டப் பெறும் விசித்திரத்தை விவரிக்கிறது முதல் கதை. வீரப்பனின் வரண்ட வாழ்வை எடுத்துக் காட்டுகிறது 'உடைந்த சீசா' செங்கமலம், அழும் குழந்தைகள், வருத்தத்தில் ஆழ்ந்துள்ள கதிர்வேலு, இவர்களிடமிருந்து—வாழ்விலிருந்து விலகிச் செல்லும் கந்தசாமியின் கதையே கடைசிக் கதை. இத்தொகுப்பிலுள்ள கதைகள் இனிய நடையில் பின்னப்பட்டிருக்கின்றன.

பிரமிட், வால் நட்சத்திரம், காலண்டர் ஆகிய மூன்று கட்டுரைகள் 'பொது அறிவு' என்ற மகுடமிட்டு வெளிவந்திருக்கின்றன; குறித்த மூன்று பொருள்கள்பற்றிய ஆராய்ச்சிமிக்க கருத்துக்கள் நிறைந்துள்ளன. இவைகளுக்குத் தேவையான புகைப்படங்களுடன், குறிப்புப் படங்களும்

இணைத்திருப்பது குறிப்பிடத் தக்கது. கட்டுரைகள் சிந்தனைக்கு நல்லவிருந்து. ஆசிரியர் செழியன் இனிய, எளிய, அழகிய தமிழில் எழுதியுள்ளார்.

ராஜாதி ராஜா; பொது அறிவு: ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. மன்றம் பதிப்பகம், சென்னை-10. விலை முறையே 0-12-0, 0-8-0

28 எழுத்துக்களில் தமிழை ஆக்கித்தர முன் வந்திருக்கிறார். தோழர் 'பேனவோட்டி' அவர் முயற்சியைப் பாராட்டுகிறோம். வெற்றிபெற வாழ்த்துகின்றோம்.

28 எழுத்துக்களில் தமிழ் படைப்பு: 'பேனவோட்டி' கானல்வரிப் பதிப்பகம், சென்னை-3. விலை 0-8-0

இந்திய அரசியல் திட்டம்! ஆம்; அனைவரும் அறிந்திருக்க வேண்டிய தொன்றுதான். அதற்குப் பயனளிக்கிறது தோழர் இளஞ்செழியனின் இப் புத்தகம். இந்திய அரசியல் திட்டம் பற்றிய விளக்கவுரைக்கு மேற்கோள், புள்ளி விபரங்களுடன் கூறியிருக்கும் உட்பிரிவு அத்தியாயங்கள் உதவுகின்றன நம் மீது சுமத்தப்பட்டிருக்கும் இத்திட்டம் எத்தனை கொடுமைகளை நம் மீது சுமத்தியிருக்கிற தென்பதற்குத் தெளிவான விளக்கம் இந்நூல்! உரிமைகளை வழங்குவதாகக் கூறும் அரசியல் திட்டம் எங்கெங்கே மக்கள் சுதந்திரத்தைப் பறிக்க வகை செய்கிறதென்பதையும் ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார், போற்றத்தக்க முயற்சி. ஆசிரியரின் வெற்றிச்சின்னம் இந்நூல்!

இந்திய அரசியல் திட்டம். உருவாக்கம்: மா. இளஞ்செழியன். மக்கள் மன்றம், சென்னை-1. விலை 2-0-0

முன்னுரையில் கூறப்பட்டிருப்பதைப் போல அருள்தாசன் சமுதாயம் சீர்பெற வேண்டுமென்ற தாகத்தில் எழுதியிருக்கின்றார் 'தாகசாந்தி'யை பல முறை பல வடிவில் நம் கண் முன் பட்டு விலகிப் போன கதையை ஆத்திரம் பொங்கும் சொல்லடுக்குகளுடன் கொணர்ந்திருக்கிறார் ஆசிரியர், புதுப் பதிப்பாக—சீர்திருத்த முன் அறிவிப்பு முழங்க!

தாகசாந்தி—தீட்டியது எஸ். ஐ. அருள்தாசன். குமரன் நினைவுப் பதிப்பகம், இராபர்ட்ஸன் பேட்டை (கோலார்பொன் வயல்) விலை 0-8-0

<u>வரப்பெற்றோம்:</u>

கலைக்கதிர் —	பொங்கல் மலர்	1952
பூஞ்சோலை—	,,	,,
மாலைமணி —	,,	,,
மகிழ்ச்சி —	,,	,,
திராவிடன் —	,,	,,
பகுத்தறிவு—	,,	,,
திராவிடநாடு	,,	,,
போர்வாள் —	(மாநாடு மலர்)	

மலர்கள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று போட்டியிடுவன போன்று கண்ணைக்கவரும் விதத்திலே பன்னிற வண்ணப் படங்களோடு சுவைபெறக் காட்சியளிக்கின்றன.

—பூவை

800 003

Edited, Printed and Published by Murugu Subramanian for Ponni Ltd., at Ponni Achakam, 16, Sepi Amman Koil Street, Tondiarpet. Madras - 21